# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 304 | சனி, செப்டம்பர் 14, 2024 | 21 பக்கங்கள்





## சஜித் ஆதரவுக்கு தமிழரசுக் கட்சி சொல்லப்போகும் காரணம் என்ன?

அகிலன்

## சிறிலங்காவின் ஜனாதிபதித்தேர்தலில் பொதுவேட்பாளர் அவசியமா?

வல்வை.ந.அனந்தராஜ்



## தமிழ்ப் பொது வேட்பாளரின் முக்கியத்துவம் குறித்து பொது மக்கள் சிலரின் கருத்துக்கள்....

*தமிழ் நாடு வணிகர் சங்கப் பேரமைப்பின் தலைவர்* **வெள்ளையன்** *அவர்களுக்கு இலக்கின் சார்பில்*

**எமது புகழ் வணக்கம்**








© 2024 இலக்கு இணையம்

# கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி:

## காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையதா?



இலங்கையில் இதுவரை 22 மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், தற்போது கொழும்பின் பிரதான பகுதியும், அதிவுயர் பாதுகாப்பு வலயமுமான பகுதி ஒன்றில் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜுலை மாதம் 13ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்குள் செல்லும் இங்குறுகடை சந்தியிலிருந்து நிர்மாணிக்கப்படும் வீதி அபிவிருத்தி பணிகளுக்காக இடம்பெற்ற அகழ்வு நடவடிக்கைகளின் போதே இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் கொழும்பு புதுக்கடை பிரதம நீதவான் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டதை அடுத்து, பிரதம நீதவான் பண்டார இலங்கசிங்க முன்னிலையில்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# சிங்கள மயமாகும் திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறும் காணி ஆக்கிரமிப்பின் காரணமாக தற்போது அம் மாவட்ட சனத்தொகையில் 27 சதவிகிதமானோர் சிங்கள மக்கள் என்றும் அம் மாவட்டத்தின் மொத்த நில விஸ்தீரணத்தில் 36 சதவிகிதத்தை அம் மக்கள் தம் கைவசம் வைத்துள்ளதாகவும் ஆய்வறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

மேலும் வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் திருகோணமலையின் குச்சவெளிப் பிரதேசம் கடந்த பத்து ஆண்டுகளில் மிக மோசமான மாற்றங்களைச் சந்தித்துள்ளது என்றும் அப்பிரதேசத்தின் 50 சதவீத நிலங்கள், அதாவது 41,164 ஏக்கர் காணிகள், பல அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் பௌத்த கோயில்களைக் கட்டுவதற்காகவும் அரசாங்க திணைக்களங்களால் கையேற்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்த மக்கள் விரட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு 3887 ஏக்கர் அபகரிக்கப்பட்ட காணிகளில் 26 பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளதாகவும் விரட்டப்பட்ட மக்கள் தமது காணிகளுக்குப் போக முடியாதபடி இராணுவம் அங்கு நிலை கொண்டிருக்கின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியாக யார் தெரிவானாலும் இணைந்து பணியாற்றுவோம்: சீனா

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் ஜனாதிபதியாக யார் தெரிவானாலும் அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.



இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு மதிப்பளிப்பதில் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் சீனா குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தின் ஆலோசகர் ஸு யாங்வே (Zhu Yanwei) மேலும் கருத்து வெளியிடுகையில்,

“எந்த நாட்டின் இறையாண்மையிலும் ஒருமைப்பாட்டிலும் நாங்கள் தலையிட மாட்டோம். இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் யார் ஆட்சிக்கு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் 220 ஐ.நா பணியாளர்கள் பலி



காசாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டு நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் பாடசாலையின் மீது கடந்த புதன்கிழமை(11) இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் ஐ.நா பணியாளர்கள் 6 பேர் உட்பட 39 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், இது வரையில் ஐ.நா பணியாளர்கள் 220 பேர் காசா பகுதியில் கொல்லப்பட்டுள்ளதாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் யு.என்.ஆர்.டபிள்யு.ஏ என்ற அமைப்பின் பொதுச்செயலாளர் பிலிபே லசாரினி தெரிவித்துள்ளார்.

மனிதாபிமானமற்றதும், முடிவற்றதுமான படுகொலைகள் தினமும் தொடர்கின்றன. மனிதாபிமான தொண்டு நிறுவனங்களின் அலுவலகங்கள், பணியாளர்கள், அவர்களின் நடவடிக்கைகள் என்பன போர் ஆரம்பமாகியதில் இருந்து தொடர்ந்து தாக்கப்படு

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# இனப்படுகொலைக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்கும் தென்னாபிரிக்கா

காசா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் இனப்படுகொலை தொடர்பான ஞாபகார்த்தமான ஆவணங்கள் எனப்படும் ஆவணங்களை தென்னாபிரிக்க அரசு அனைத்துலக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அது கடந்த செவ்வாய்க்கிழமை(10) தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இனப்படுகொலை தொடர்பான ஆவணங்களை அடுத்த மாதம் தென்னாரிக்கா அரசு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.



ஆபிரிக்கா பிராந்தியத்தில் பொருளாதாரத்தில் முன்னனி வகிக்கும் தென்னாபிரிக்கா அரசு இஸ்ரேலுக்கு எதிரான வழக்கை கடந்த வருடம் அனைத்துலக நீதிமன்றத்தில் தொடுத்திருந்தது.

இஸ்ரேலுக்கு எதிரான

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# இந்தியாவுக்கு எதிராக கென்யாவில் போராட்டம்



கென்யாவின் மிக முக்கிய அனைத்துலக விமான நிலையமான நைரோபி அனைத்துலகவிமானநிலையத்தை இந்தியாவின் அதானி நிறுவனம் கையகப்படுத்துவதற்கு எதிராக விமான நிலைய பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை(11) இடம்பெற்ற இந்த போராட்டத்தால் பல விமானங்களின் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதுடன், பயணிகளும் கடும் நெருக்கடிகளை சந்தித்துவருகின்றனர்.

30 வருட குத்தகைக்கு

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# அமெரிக்கா பொருளாதாரப் பயங்கரவாதத்தை மேற்கொள்கின்றது – ஈரான்

ரஸ்யாவுக்கு குறுந்தூர ஏவுகணைகளை விநியோகித்ததாக தவறாக ஈரான் மீது குற்றச்சாட்டுக்களை மேற்கொண்டுள்ள அமெரிக்கா எம்மீது பொருளாதாரத் தடைகளை கொண்டுவந்துள்ளது என்பது பொருளாதார பயங்கரவாதம் என ஈரானின் வெளிவிவகார அமைச்சர் அபாஸ் அறக்சி கடந்த புதன்கிழமை(11) தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தடைக்கு முன்னர் பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஈரான் மீது தடையை மேற்கொண்டிருந்தன. மேற்குலக நாடுகளின் இந்த திட்டமிட்ட செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அவர்கள் விரைவில் எதிர்கொள்வார்கள் என ஈரானின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் நசார் கனானி தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி 19ஆம் பக்கம்

## தமிழ்ப் பொது வேட்பாளர் ஈழத்தமிழரின் ஒற்றுமையின் அடையாளம்



இலங்கையில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் கட்சிகள் மற்றும் அமைப்புகள் இணைந்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை தமிழ் மக்களுக்கான பொது வேட்பாளராக நிறுத்தியுள்ளன.

இலங்கையில் சனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுக்கான பொது வேட்பாளராக ஒருவர் களமிறக்கப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தேர்தல் நெருங்கும் நிலையில் வடக்கு கிழக்கு முழுவதுமாக தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு பெருகி வருகின்றன.

இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து, நீதிக்கும் சமாதானத்துக்குமான குருக்கள்- துறவியர் ஒன்றியம் வடக்கு கிழக்கு- வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

‘மீண்டும் ஒரு சனாதிபதி தேர்தலுக்கு நாடு தயாராகிக்கொண்டு இருக்கின்றது. இச் சனாதிபதி தேர்தல் பற்றிய அல்லது சனாதிபதி தேர்தல் வேட்பாளர் பற்றிய அரசியல் அறிவு, அவர்களது தனி-

கூட்டு அரசியல் இறந்தகால வரலாற்றுடன்தான் எமக்கு முன்னுள்ள தெரிவாக முன்வைக்கப் பட்டுள்ளது. இது எவ்வளவு நம்பிக்கை தருவதாக இருக்கிறது என்பதை அடிக்கோடிட்டு காட்ட வேண்டிய தேவையில்லை. இந்த சனாதிபதி தேர்தலும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள் உள்ள சட்டகத்திற்குள் இருந்தே நடாத்தப்படுகின்றது என்ற உண்மையை கூறாமல் இருக்க முடியாது.

தற்போதுள்ள சனநாயக முறைமை எண்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது என்ற உண்மை பொது அறிவுக்குட்பட்டது.

வாக்குகளின் எண்ணிக்கையை மையப்படுத்திய சனாதிபதி சனநாயக தெரிவில் ஈழத்தமிழ் மக்களுடையதும் ஏனைய சிறுபான்மை இனக் குழுக்களினதும் வாக்குகள் செல்வாக்கு செலுத்துவது வரையறுக்கப் பட்டுள்ளது.

தெற்கிலிருந்து சனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிங்கள பௌத்த தேசியத்தின் மேலாண்மையை வலியுறுத்தியே பிரசார மேடைகளை அலங்கரிக்கின்றார்கள். ஈழத்தமிழ் மக்களுடைய கூட்டு அரசியல் வேணாவாவையும் தமிழின அழிப்பையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அரசியல் கோட்பாட்டுச் சூழலில் தெற்கில் இருக்கும் சனாதிபதி வேட்பாளர்கள் ஒன்றுபட்டிருக்கின்றார்கள்.

அதே நேரத்தில் தமிழின அழிப்பில் நீதி கோருவதை மறுப்பதோடல்லாமல் ஸ்ரீலங்காவின் படைக் கட்டுமானம் சிங்கள தேச விடுதலைக் கட்டுமானத்தில் ஆற்றிய பங்களிப்பை கதாநாயக சொல்லாடலுக் கூடாகவே கட்டமைக்கின்றார்கள்.

தமிழர் தாயகம் தொடர்ந்து ஈழ தமிழ்த்தேசிய நீக்கத்துக்குள் வலிந்து தள்ளப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இது வெவ்வேறு வடிவங்களை பரிமாணங்களை கொண்டுள்ளது.

உதாரணமாக, ஈழத்தமிழர் ஒருங்கிணைந்த தாயகத்தை துண்டாடல், தமிழர் தாயகத்தில் இராணுவமயமாக்கச் செறிவை அதிகரித்தல், ஈழத்தமிழர் தாயகம் தொடர்ந்தும் அடக்குமுறைக்கு உட்பட்ட தேசமாகவே உள்ளது. ஈழத்தமிழர் நிலங்கள் வலிந்து பறிக்கப்படுகின்றன.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

## சங்குச் சின்னத்துக்கு வாக்களித்து இறைமையை மீளுறுதி செய்து தேசமாக எழுவோம்

சிறிலங்காவின் 9வது நிறைவேற்று அதிகாரமுள்ள அரசுத்தலைவர் தேர்தலுக்கு இன்னும் 7 நாட்களே உள்ளன. இந்தத் தேர்தல் முறைமையே சிங்களக்கட்சியின் வேட்பாளர் ஒருவரே சிறிலங்காவின் அரசத் தலைவராக வரக்கூடிய முறையில் கட்டமைக்கப்பட்டவொன்று எனத் தெளிவாகத் தெரிந்த நிலையிலும், ஈழத்தமிழர் இறைமையும் தன்னாட்சியும் கொண்ட மக்கள் என்ற வரலாற்று உண்மையை ஈழத்தமிழர்கள் மீளுறுதி செய்யும் சனநாயகப் போராட்டக்களமாக இந்தத் தேர்தலில் பொதுவேட்பாளராக சங்குச் சின்னத்தில் போட்டியிடுபவராக முன்னாள் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரனை முன்னிறுத்தி 81 ஈழத்தமிழர் சிவில் அமைப்புக்களும் 7 ஈழத்தமிழர் அரசியல் கட்சிகளும் மாற்றியுள்ளன. ஈழத்தமிழர் சனநாயக அரசியல் வரலாற்றில் அதிகளவான சிவில் சமுகத்தினரும் அதிக அளவான ஈழத்தமிழர் அரசியல் கட்சிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ள இந்தப் புதிய வரலாறானது ஈழத்தமிழர்கள் மண்ணையும் மக்களையும் பாதுகாக்கத் தேசமாக எழுவதற்கான ஆற்றலுள்ளவர்கள் என்ற புதிய நம்பிக்கையை உலகுக்கு அளித்துள்ளதன் விளைவாகவே அனைத்துலக நாடுகளின் தூதுவர்களும் தமிழர் தாயகத்துடன் நேரடியாகவே செயலாற்றத் தொடங்கியுள்ளனர் என்பது பொதுவேட்பாளருக்கான முதல்வெற்றி.

இத்தேர்தலை நாம் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இறைமையுள்ள தனியான தேச மக்கள் என்பதை உறுதி செய்ய நமக்கு நாமே வாக்களிக்கும் சனநாயகப் போராட்டமாக மட்டும் மாற்றி 22ம் திகதி முதல் இந்த பொதுவேட்பாளரை அறிமுகப் படுத்திய தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பு தொடர்ந்து ஈழத்தமிழர்கள் அனைவரையும் பொதுவெளியில் அவர்களிடையுள்ள வேற்றுமைகளை மதித்து ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையில் ஒருமைப்பட்டு ஒரு இலக்கை நோக்கி பல அணுகுமுறைகளில் சனநாயக வழிகளில் செயற்பட வைக்கும் பரந்து விரிந்த சனநாயகக் குடைநிழல் அமைப்பாகப் பரிணாமம் அடைய வைக்கும் தன்பணி தொடங்கும் என்பதை பா. அரியநேத்திரன் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இதற்கான நம்பிக்கையைத் தரும் வகையில் இந்தப் பொதுவேட்பாளர் அறிமுகத்தில் உச்சப்பங்காற்றிய ஆசிரியர்கள் மாணவர்கள் தொழிலாளர்கள் மருத்துவர்கள் ஆன்மீகத்தலைவர்கள் கண்முன்னே நிற்கின்றார்கள். எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநயாக்காவின் 1920களின் பின்னரான இந்த ஐங்குழுக்கள் இணைப்பே சிங்கள பௌத்த மக்களிடை ஐரோப்பிய மயக்கத்தில் இருந்த தேசிய இறுக்கநிலையை உடைத்து பேரினவாத எழுச்சியாக மாறியது என்பது வரலாறு. அதுபோலவே இன்றைய ஈழத்தமிழரிடையான இந்த தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பின் தொடர் பரிணாமமும் நிச்சயம் ஈழத்தமிழர் தேசிய நீக்கத்தை முன்னெடுக்கும் உள்ளூர் வெளியூர் சக்திகளால் தோன்றியுள்ள இறுக்கநிலையை உடைத்து ஈழத்தமிழர் தேசியப் பேரெழுச்சியை உருவாக்கும் என்பது வெளிப்படை.

ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையென்பது மொழி மத சாதி பிரதேசப் பிரச்சினையல்ல. இந்த மண் எங்களின் சொந்த மண் என்கிற நிலத்தின் மீதான பறிக்கப்பட முடியாத பிறப்பால் வந்த அடிப்படை உரிமையை மீளுறுதிப்படுத்தும் இறைமைப் பிரச்சினை. எனவே மண்ணின் மீதான தங்களின் நிலஉரிமைக்காகப் போராடும் ஈழத்தமிழர்களுக்கு தங்களுடன் தங்கள் மண்ணில் வாழும் எல்லா மக்களதும் அரசியல் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டு அவர்களது பாதுகாப்பான வாழ்வும் அமைதியும் வளர்ச்சிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பது நன்கு தெரியும். மண்ணில் வாழும் அனைத்து மக்களும் சமத்துவமான சகோதரத்துவமான சுதந்திரமான முறையில் உண்மைகளின் அடிப்படையில் தேசமாக எழுந்து செயலாற்றுகின்ற பொழுதுதான் மண்ணின் பொருளாதாரம் மக்களின் பொருளாதாரமாக உள்நாட்டு வெளிநாட்டுச் சுரண்டலற்று ஊழல்களற்று உறுதிப்பட்டு மக்களின் ஆட்சி அரசியலில் நடைமுறைச்சாத்தியமாகும். இதனாலேயே ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் மண்மீட்புப் போர் என்று அறிவிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தங்கள் மண்ணில் அந்த மண் தங்களுடையது என்ற வாழ்வியல் தன்மையுடன் மற்றவர்களைச் சமத்துவமாக ஏற்று வாழும் பொழுதுதான் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் நடைமுறைச் சமுக வாழ்வாகி அனைத்து தளைகளில் இருந்தும் விடுதலை நடைமுறைச் சாத்தியமாகும்.

ஒரு மனிதன் தான் விடுதலை பெற்றவன் என்று உள்ளத்தால் முழுஅளவில் உறுதி கொண்டால் அவனை எதனாலும் அடிமைப்படுத்த முடியாது. இதற்காகவே ஈழத்தமிழரின் சின்னமாக பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டு ஈழத்தமிழர் யாராலும் அடிமைப்படுத்த முடியாத விடுதலை உள்ளம் கொண்டவர்கள் இதனால் சிறிலங்காவினதோ அல்லது அதன் ஆதரவு நாடுகளதோ ஈழத்தமிழரின் இறைமையை அடிப்படையாகக் கொள்ளாத எந்தத் தீர்வு முயற்சியும் அவர்களின் சமத்துவத்தையோ சுதந்திரத்தையோ உறுதி செய்யாதென்கிற உண்மையைச் சிங்களப் பெரும்பான்மையினர்க்கும் பிராந்திய உலக வல்லாண்மைகளுக்கும் தெரிவிக்கின்ற தேர்தலாக இந்தத் தேர்தல் மாற்றப்பட்டுள்ளது. இதில் பொதுவேட்பாளருக்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு வாக்கும் ஈழத்தமிழரின் இறைமையை மீளுறுதிப்படுத்தி இருப்பை உறுதியாக்குவதுடன் அந்த மண்ணில் வாழும் அனைவருக்குமான அரசியல் உரிமைகளையும் உறுதி செய்யும் என்பதைக் கவனத்தில் கொண்டு வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு ஈழத்தமிழரும் ஈழத்தமிழர் தாயகத்தில் வாழும் அனைத்து மக்களும் சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்கையில் அது யாருக்கும் தோல்வியற்ற வெற்றி-வெற்றி என்ற நிலையாக மாறி அனைவரதும் வாழ்வுக்கான பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளர்ச்சிகளையும் ஈழத்தமிழர் தாயகத்தில் நடைமுறைச்சாத்தியமாக்கும். இதனால் எத்தனை வாக்குகள் அளிக்கப்பட்டாலும் அத்தனை வாக்குகளும் இந்நோக்குக்குப் பலம் சேர்க்கும்.

வாக்குகள் பெறும் நோக்கு தேசஇனத்தைப் பலராகப் பிரிந்து குழுக்களாக்கி கட்சிகளாக்கி பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்குங்கொல்குறும்பும் இல்லது நாடு என்ற வள்ளுவரின் எச்சரிப்பையும் மறக்கவைத்து முரண்பாடுகளின் இருப்பாகவே நாட்டையே மாற்றிவிடும். இதிலிருந்து வேற்றுமைகளை மதித்து சமுக விலக்கை மாற்றி அனைவரையும் உள்வாங்கிப் பொதுவெளியில் தேசமாக மக்கள் தாயக தேசிய தன்னாட்சி ஒருமைப்பாட்டுடன் எழுவதற்கான வெற்றிச் சங்கொலியாக சங்குச் சின்னத்துக்குக் குவிக்கப்படும் வாக்குகள் மாறட்டும். உலக அரசியலுக்கு நமக்கு நாமே வாக்களிப்பதன் மூலம் தங்களுக்குத் தாங்களே மக்கள் போராடலாமென்கின்ற புதிய சனநாயகப்போராட்டத்தை ஈழத்தமிழர்கள் பொதுவேட்பாளர்கள் மூலம் அறிமுகம் செய்துள்ளனர். இதன்வழி ஈழத்தமிழர்கள் சனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளாது தம்மைத் தனிமைப்படுத்தும் போக்கால் அவர்கள் அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளின் தாராண்மைவாத சனநாயகத்துக்கு எதிரானவர்கள் என்ற நீண்டகால குற்றச்சாட்டும் முறியடிக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மைகளின் இறைமைகளின் இணைவாகவும் வல்லாண்மைகளின் பங்காண்மைகளின் இடமாகவும் மாறியுள்ள இலங்கைத் தீவின் இன்றைய நிலையில் ஈழத்தமிழர்களின் இறைமையை வலியுறுத்தும் ஒருமைப்பாடு ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துலகச் சாதக நிலைகளையும் தோற்றுவிக்கும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது. எப்பொழுதும் பரிணாம மாற்றங்கள் ஏற்படுகையில் வரலாற்றை மாற்றுகின்ற வரலாறு தோன்றும். இதனைப் பிளவு என்று தவறாகப் பொருள் கொள்ளாது பரிணாமம் என்று ஏற்று ஈழத்தமிழர் இறைமையும் தன்னாட்சியும் கொண்ட மக்கள் என்பதைச் சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் வாக்களித்து உறுதி செய்ய இலக்கு பணிவாக அழைக்கிறது.

**ஆசிரியர்**

# சஜித் ஆதரவுக்கு தமிழரசுக் கட்சி சொல்லப்போகும் காரணம் என்ன?

அகிலன்

ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைகள் முடிவடைவதற்கு இன்னும் சில தினங் கள் மட்டும்தான் உள்ளது. எதிர் வரும் புதன்கிழமை 18 ஆம் திகதி மட்டுமே பரப்புரைகளை முன்னெடுக்க முடியும். அடுத்த சனிக்கிழமை தேர்தல். தபால் மூலமான வாக்களி ப்பு முடிவடைந்துவிட்டது.



இந்தநிலைமையில் தமிழரசு கட்சிக்குள் மீண்டும் குழப்பம்! யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுப்பதற்காக தமிழரசு கட்சி அமைத்த விசேட குழு மீண்டும் கூடி பிரதான வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை ஆராய்கி றது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் தமிழ ரசு கட்சியின் நிலைப்பாடு என்ன என்பது திங்கட்கிழமை அறிவிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த முதலாம் திகதி தமிழரசு கட்சியின் மத்திய குழு வவுனியாவில் கூடியபோது, சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பது என்ற ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தது. ஆனால் இந்த தீர்மானம் கட்சியின் சிறப்புக்குழுவில் ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட முடிவாக இல்லாமல் சுமந்திரனால் எடுக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட முடிவாகவே இருந்தது. இது குறித்து ஆராய்ந்து முடிவை அறிவிப்பதற்காக அமைக்கப்பட்ட விசேடக் குழு கூட்டப்படவும் இல்லை! இது தொடர்பாக அவர்கள் ஆராயவும் இல்லை.

ஆகஸ்ட் 18ஆம் தேதி நடைபெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்காக விசேட குழு நியமிக்கப்பட்டது. ஆனால் அந்தக் குழு கூடாமலே கடந்த மத்திய குழுவின் கூட்டத்தில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்க ளின் அடிப்படையில் தமிழரசு கட்சியின் முடிவு அறிவிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்களும் அது தொடர்பில் கேள்வி எழுப்பப்படவில்லை.

கட்சி யாப்பின் அடிப்படையில், ஒரு தீர்மானத்தை எடுப்பதற்காக நடைமுறைகள்கையா ளப்பட்டுள்ளன என்பதுதான் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் கருத்து! அதனால் அந்த முடிவை மாற்ற முடியாது என்று அவர் சொல்கின்றார்.

தமிழரசு கட்சியின் முக்கியஸ்தரான சிறிதரன் இந்த முடிவு எடுக்கப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அப்போது அவர் லண்டனில் இருந்தார். நாடுதிரும்பிய உடனேயே கிளிநொச்சி கிளையின் கூட்டத் தைக் கூட்டி பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை மீண்டும் எடுத்தார். அதே வேளையில் சிறிதரன் கொடுத்த அழுத்தத்தை தொடர்ந்தே விஞ்ஞாபனங்களை ஆராய்வதற்காக என அமைக்கப்பட்ட விசேட குழுவை அவசரமாகக் கூட்டுவது என்று முடிவை தலைவர் மாவை சேனாதிராஜா எடுத்தார்.

அந்த விசேட குழு கூட்டப்படாமலேயே எவ்வாறு தமிழரசு கட்சி தீர்மானம் எடுத்தது என்ற ஒரு கேள்வியையும் சிறிதரன் கூட்டத்தில் எழுப்பி இருந்தார்.

இதைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க் கிழமை வவுனியாவில் அவசரமாக கூடிய சிறப்பு குழு பிரதான வேட்பாளர்களின் விஞ்ஞாப னங்களை ஆராய்ந்து தமது நிலைப்பாட்டை அறிவிப்பது என்று தீர்மானித்தது. அந்த அறிவிப்பு இன்னும் ஒரு சில தினங்களில் வெளிவரும்.

38 ஜனாதிபதி வேட்பாளர்கள் இந்த தேர்தலில் களம் இறங்கி இருந்தாலும் கூட அதில் சுமார் பத்து வேட்பாளர்கள் மட்டுமே தமது விஞ்ஞாபனங்களை வெளியிட்டு இருக் கின்றார்கள். அதில் ஆறு வேட்பாளர்களின் விஞ்ஞா பனங்கள் தமிழரசு கட்சியின் விசேட குழுவால் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இருந்தபோதிலும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து முரண் பாடான கருத்துக்கள் அந்த விசேட குழுவின் உறுப்பினர்களாலேயே முன்வைக்கப்படுகின்றது. சுமந்திரனைப் பொறுத்தவரையில் சஜித் பிரேம தாசாவுடன் பேரம் பேசுவதற்கான ஒரு சந்தர்ப் பமாகவே இதனை பயன்படுத்த முற்படுகின்றார். சஜித் பிரேமதாசாவின் விஞ்ஞாபனத்தில் தெரி விக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கான கால வரையறை ஒன்று தொடர்பாக அவருடன் தான் பேச்சு வார்த்தை நடத்தி அதன் பெரும் பெறுபேறுகளை அடுத்த சந்திப்பில் வெளியிடப்போவதாக அவர் கூறுகின்றார்.



சுமந்திரனைப் பொறுத்தவரையில், சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற முடிவில் மாற்ற மில்லை. அது முடிந்த முடிவு! அவரது விஞ்ஞா பனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மேலதிக விளக்கங்களைப் பெற்றுத் தருவது மட்டும்தான் தன்னுடைய பணி என்ற வகையில் அவரது கருத்துக்கள் அமைந்துள்ளன.

விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 13 ஐ நடைமுறைப்படுத்துவது குறித்த காலவரை யறையைப் பெற்று அதனை விசேட குழுவுக்கு அறிவித்து அதனை அடிப்படையாகக் கொண்டு, சஜித்துக்கு ஆதரவளிப்பதற்கான அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு சுமந்திரன் திட்டமிடுகின்றார். அரசியலமைப்பில் ஏற்கனவே உள்ள 13 தான் சஜித்தின் வாக்குறுதி! அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயத்தை அமுல் செய்வதாக தேர்தல் வாக்குறுதியாகச் சொல்வது இலங்கையில் மட்டுமாகத்தான் இருக்கும்!

இதிலும் ஒரு நெருக்கடி இருக்கின்றது. தான் ஜனாதிபதியாக வந்தால், அடுத்த நாளே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்கிறார் சஜித். அப்படியானல் நவம்பரில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம். அதனைத்தொடர்ந்துஉள்ளுராட்சிமன்றங்களுக் கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். நீதிமன்றமே உள்ளுராட்சி மன்றத்தேர்தல்களைகூடிய விரைவில் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. ஆக, இந்த இரண்டு தேர்தல்களையும் சந்திக்க முன்னர் 13 ஐ சஜித் தூக்கிப் பார்க்கப்போவதில்லை.

**அதற்கு முக்கியமான காரணம் இருக்கிறது.**

ஜனாதிபதித் தேர்தலின் போது சிறுபான்மையினரது வாக்குகள் அவசியம். நாடாளுமன்ற, உள்ளுராட்சிமன்ற, மாகாண சபைத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் சிங்களக் கட்சிகளுக்கு அதன் முக்கியத்துவம் குறைவு. ஆக, ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி என்ற கதைதான் இங்கும் தொடப்போகின்றது.

வரலாற்றிலிருந்து அதனைக்கூடவா தமிழர சுக் கட்சித் தலைவர்கள் படிக்காமலிருக்கின்றார் கள்?



அதேவேளையில் சிவஞானம் சிறிதரனை பொறுத்தவரையில், தமது கைவசம் ஆறு வேட் பாளர்களின் விஞ்ஞாபனங்கள் இருப்பதாக அவர் கூறுகின்றார். அவை தொடர்பாக ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். அதன் அடிப்படையிலேயே முடிவு அறிவிக்கப்படும் என்பது தான் அவரது நிலைப்பாடாக வெளிப்பட்டது.

கட்சியின் முடிவு எவ்வாறானதாக இருந்தா லும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவில் மாற்றமில்லை என்பதுதான் தன்னுடைய நிலைப்பாடு என்று சிறிதரன் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார்.

சிறிதரன் கொஞ்சம் தீர்க்க தரிசனமாக, "தொலைநோக்குடன்" சிந்திக்கிறார் என்பது தெரிகின்றது. இது ஜனாதிபதி தேர்தலுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. அது முடிந்தவுடன் பொதுத் தேர்தல் வரும் என்பது அவருக்குத் தெரியும். உள்ளூர் அரசியலுக்கு பொதுவேட்பாளருடன் நிற்பதுதான் பாதுகாப்பானது என்பது அவரது கணிப்பு. அத்துடன் தமிழரசுக் கட்சியில் உள்ள தமிழ்த் தேசியவாதிகளை தன்னுடன் வைத்திருப்பதற்கும் சுமந்திரனை தனமைப்படுத்தவும் அது அவருக்கு அவசியம்.

தமிழரசுக் கட்சியின் முடிவு அறிவிக்கப்பட முன்னர், கட்சியின் விசேட குழு மீண்டும் கூடி ஆராயும் எனத் தெரிகின்றது. அதில், சுமந்திரன் தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பார். கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படாது என்றே கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சஜித்தை ஆதரித்து அவர் எதுவும் செய்யவில்லை என்றால், அதன் பலனை பொதுத் தேர்தலில் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

• • •

# வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு பொது வேட்பாளர் அச்சுறுத்தலா?



**இலங்கையின் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி நெருங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் பிரதான வேட்பாளர்களின் பரப்புரைகள் சூடு பிடித்திருக்கின்றது. இந்த நிலையில் தற்போதைய கள நிலைமைகள் பற்றி பிரபல பத்திரிகையாளர் நிக்சன் அவர்கள் அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை ‘இலக்கு’ வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் சில தினங்கள் தான் இருக்கின்றது இந்த நிலைமையில் கள நிலவரங்கள் எவ்வாறு இருக்கின்றது? அதாவது பிந்திய கருத்து கணிப்புகளின்படி யார் முன்னணியில் நிற்கின்றார்கள்?**

இந்த வேட்பாளர்கள் பிரசாரங்களின் போது தாக்குதல்கள் மற்றும் சவால்களைத்தான் முன்வைக்கிறார்கள். அதோடு எச்சரிக்கைகளும் விடுகிறார்கள். குறிப்பாக ஜே.வி.பி யாழ்பாணத்தில் மக்களை எச்சரித்தது. இந்த தாக்குதல் எச்சரிக்கைகள் இந்த சவால்கள் இதை வைத்துக் கொண்டுதான் இந்த முன்னணி நிலையை பார்க்கக்கூடியதாக இருக்கிறது. மக்களுக்கு என்ன நடக்கும். என்ன செய்யப் போகிறார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து எப்படி மீள வேண்டும் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ன என்ற விடயங்களில் எல்லாம் தெளிவு இல்லை.

தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்துவிட்டன அவற்றிலே எந்த தெளிவுகளும் இல்லை. எல்லாம் வெறுமனே ஒரு பொதுப்படியான தன்மையில் அங்கே எழுதப்பட்டிருக்கின்றன. எந்த தேர்தல் விஞ்ஞாபனமும் ஆழமாக ஆராய்ந்து மக்களுடைய பிரச்சனைகளை இலங்கை தீவு என்ற அடிப்படையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடைய பிரச்சனை முஸ்லிம் மற்றும் மலைய மக்களுடைய கோரிக்கைகள் என்ன என்ற அந்த அடிப்படைகளும் ஆராயாமல் அங்கே எழுதப்பட்டிருக்கின்றன.

ஆகவே அந்த அடிப்படையில் நாங்கள் ‘முன்னணி’ நிலை என்று பார்க்கின்ற பொழுது இப்போது கடினமாக இருக்கின்றது. ஏனென்றால் இலங்கையினுடைய அரசியல் வரலாற்றில் இலங்கை ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக மூன்று பிரதான வேட்பாளர்கள் போட்டி போடுகின்றார்கள். அதோடு முதன்முறையாக வடக்கு கிழக்கிலே பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கின்றார். ஆகவே நான்கு பிரதான வேட்பாளர்களோடு இந்த போட்டி நடக்கின்றது என்று சொன்னால் வாக்குகள் எப்படி அமையப் போகின்றன என்ற கேள்வி எழுகின்றது குறிப்பாக இதுவரை காலம் இரண்டு பிரதான சிங்கள வேட்பாளர்கள் தான் கொழும்பிலே போட்டி போட்டார்கள்.

ஆனால் இப்போது மூன்று பிரதான வேட்பாளர் இருக்கின்றார்கள் ரணில் விக்ரமசிங்க, சஜித்பிரேமதாச, அனுர குமார திசாநாயக்க. ஏனைய சிங்கள வேட்பாளர்களை நாங்கள் பிரதான வேட்பாளர்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் தமிழ் பொது வேட்பாளர் அரிய நேத்திரன் அவர்களை பிரதானமாக பார்க்க வேண்டும் ஏனென்றால் அது தமிழ் மக்களுடைய வாக்குகளை திருப்பக்கூடிய அளவுக்கு நிலைமை வந்திருக்கின்றது. சிவில் சமூக அமைப்புகளுடைய கூட்டு முயற்சியும் தமிழ் தேசிய கட்சிகளுடைய ஒற்றுமையும் இங்கே ஆதரவாக இருக்கின்றது. ஆகவே யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகளுக்கு பின் முதல் முறையாக ஒரு பரிசோதனையாக இது இடம்பெறுகின்று என்ற அடிப்படையில் அரிய நேத்திரனுடைய வாக்குகளும் அநேகமாக தென் பகுதியை மையமாகக்கொண்ட சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க ஆகியோருடைய வாக்குகளில் சிதைவுகளை ஏற்படுத்தலாம். ஜே,வி.பிக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

இப்போது யார் முன்னணியில் என்று பார்ப்பதாக இருந்தால், நான் அறிந்த வரையில் மிகக் கடினமான ஒன்றுதான். இலங்கையில் ஐரோப்பிய நாடுகளை போன்று ஒரு சுயாதீனமான கண்காணிப்பு அல்லது சுயாதீனமான மதிப்பீடு என்பது இல்லை. எல்லாம் அவரவர் விருப்பங்களுக்கு ஏற்பதான் இங்கே மதிப்பீடுகள் வருகின்றன. ஆகவே அதனைக் கொண்டு நாங்கள் முன்னணியை கணிப்பிட முடியாது. ஆனால் சாதாரண மக்களுடைய சிந்தனைகள், மக்களுடைய பேச்சு வழக்குகளை பார்க்கின்ற பொழுது, ரணில் விக்ரமசிங்க ராஜபக்ச குடும்பத்தினுடைய ஆதரவோடு ஜனாதிபதியாக வந்தவர். இப்போது சுயாதீனமாக போட்டி போட்டாலும் நாமல் ராஜபக்சவையும் விஜயதாச ராஜபக்ச மற்றும் சரத் பொண்சேகா போன்ற பிரபலங்களை எல்லாம் ஜனாதிபதி தேர்தலிலே போட்டி போட களமிறக்கியது விக்ரமசிங்க தான் என்ற கருத்து இப்போது சிங்கள மக்கள் மத்தியிலே பேசப்படுகின்றது ஆகவே அப்படி பார்க்கின்ற பொழுது சஜித்தினுடைய நிலைமை கொஞ்சம் வித்தியாசமாக தெரிகின்றது. அதோடு இந்தபுவிசார்அரசியல்போட்டிக்குள்ளேகுறிப்பாக இந்தியாவை பார்க்கின்ற பொழுது இந்தியாவினுடைய அணுகு முறையும் சஜித்தை நோக்கியதாகத்தான் இருக்கின்றது.ஆனால் ஜே.வி.பி வெற்றி பெறும் அனுரகுமார திசாநாயக்க வருவார் என்ற கதைகள் பலமாக சமூக வலைத்தளங்களிலும் கொழும்பை மையமாகக் கொண்ட அரசியல் வட்டாரங்களிலும் அடிபட்டாலும் கூட சஜித்தினுடைய வெற்றி உறுதி இல்லை என்று கொழும்புக்கு வெளியே இருக்கக்கூடிய சிங்கள மக்களின் பேச்சுக்களை பார்க்கின்ற பொழுது தெரிகின்றது. ஆகவே முன்னணி என்று கூற முடியாத ஒரு நிலை இருந்தாலும் இந்த மூன்று பேருக்குள்ளும் சஜித்தினுடைய நிலைமை தற்போது மேலோங்கி இருக்கின்ற ஒரு தன்மையை காணக்கூடியதாக உள்ளது.

**அனைத்து பிரதான வேட்பாளருடைய விஞ்ஞாபனங்களும் வெளிவந்திருக்கின்றது. அது தொடர்பாகபல்வேறு ஆய்வுகளும் நடத்தப்பட்டிருக்கின்றது. உங்களுடைய பார்வையில், இனப் பிரச்சனைக்கு தீர்வு காணக்கூடிய வகையில் தங்களுடைய விஞ்ஞாபனத்தின் மூலமாக இந்த கட்சிகள் முன்வைத்திருக்கின்றதா?**

குறிப்பாக ரணில் விக்ரமசிங்க சஜித் பிரேமதாசா அனுரகுமார திசாநாயகா ஆகியோருடைய மூன்று விஞ்ஞாபனங்களை நான் மூன்று வகையாக பார்க்கின்றேன். மூன்றும் அடிப்படையில் ஒற்றுமை என்பதை சொல்ல வருகின்றேன். ரணில், சஜித், அனுர இந்த மூன்று பேருடைய விஞ்ஞாபனங்களிலும் மூன்று விடயங்கள் வருகின்றன. ஒன்று பௌத்த சமயத்துக்கான முன்னுரிமை. இரண்டாவதாக ஒற்றையாட்சியை வலுப்படுத்தும் யோசனைகள் பரிந்துரைகள் மூன்றாவது பொருளாதார ரீதியான முன்னேற்றங்கள்.

இந்தப் பொருளாதார ரீதியான அபிவிருத்தி திட்டங்கள் என்பதற்குள்ளே தமிழ் முஸ்லிம் மக்கள் இணைக்கப்படுகின்ற விடயங்கள் எதுவும் இல்லை. இதிலே நாங்கள் ரணில் விக்ரமசிங்க உடைய விஞ்ஞாபனம் 13ஐ நடைமுறைப்படுத்துகிறேன் ஆனால் காணி, போலீஸ் அதிகாரம் தர முடியாது என்ற வகையிலான வாசகங்கள் அங்கே இணைக்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை 17 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் சட்டமூலம் எப்படி திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற விடயங்கள் எல்லாம் மூன்று வேட்பாளர்களின் விஞ்ஞாபனத்திலும் காணப்படுகின்றது. ஆனால் குறிப்பிடும் படியாக இலங்கையில் வாழக்கூடிய தேசிய இனங்கள் என்ற சொற்பிரயோகம் என்ற அந்த வாக்கிய பதங்கள் இல்லை அது முழுமையாக நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. 30 ஆண்டு காலம் யுத்தமும் அதன் பின்னரான 15 ஆண்டுகால சூழ்நிலையும் எதுவுமே விஞ்ஞாபனங்களில் தென்படவில்லை. இது ஒரு ஒற்றையாட்சி கட்டமைப்பு என்ற விடயம் மாத்திரம் தென்படுகின்றது. இவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களுக்காக எதுவும் இல்லை என்றே சொல்ல முடியும்.

**தமிழரசு கட்சியினுடைய மத்திய குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதாக அறிக்கை வெளியிடப்பட்டது. அவர்கள் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கப் போகின்றார்கள். இப்போது ஒரு குழப்பமான நிலைமைக்கு அவர்கள் உள்ளாகி இருக்கின்றார்கள். தமிழரசு கட்சி இந்த விடயத்தில் எவ்வாறான ஒரு நிலைப்பாட்டுக்கு வரும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?**

நீலன் திருச்செல்வத்தினுடைய வழியில் நின்று செயற்படுகின்றார் சட்டத்தரணி சுமந்திரன். நீலன் திருச்செல்வம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கி அமைச்சராகவும் இருந்தார். பின்னர் வெளியேறி வந்தார். எங்களுக்கு இந்த அரசாங்கத்தை நம்ப முடியாது என்று சொன்னார் அதன் பின்னர்தான் பல விடயங்கள் எல்லாம் பேசியிருந்தார்.அந்த பரம்பரையில் வழிவந்தவர் போன்றுதான் நான் சடத்தரணி சுமந்திரனை பார்க்கின்றேன். ஆகவே சஜித் பிரேமதாசவுக்கு

ஆதரவு என்பது அவரும் அவருடைய சில ஆதரவாளர்களும் எடுத்த முடிவாகத்தான் அது பார்க்கப்படுகின்றது. எனக்கு தெரியவில்லை.

ஏனென்றால் தமிழரசு கட்சியினுடைய

தொடர்ச்சி 20ஆம் பக்கம்



# தமிழ்ப் பொது வேட்பாளரின் முக்கியத்துவம் குறித்து பொது மக்கள் சிலரின் கருத்துக்கள்....

**இலங்கையில் நடைபெறவுள்ள ஜனா திபதித் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் கட்சிகள் மற்றும் அமைப்புகள் இணைந்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை தமிழ் மக்களுக்கான பொது வேட்பாளராக அறிவித்துள்ளன.**

**இந்த நிலையில் வடக்கு கிழக்கில் பொதுக்கூட்டங்களும் பிரசாரப்பணிகளும் சூடு பிடித்துள்ளன.**

**தமிழ்ப் பொது வேட்பாளரின் முக்கியத்துவம் குறித்து பொது மக்கள் சிலரின் கருத்துக்கள்....**

### பத்திரிகையாளர் மதி

காலகாலமாக சிங்கள வேட்பாளருக்குத்தான் தமிழ் மக்கள் தமது வாக்குகளை செலுத்தி வந்துள்ளனர். ஆனால் அவ்வாறு ஜனாதிபதியாக வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுடையபிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியவாறு எந்த ஒரு திட்டத்தையும் உருவாக்குவதற்கு அந்த ஜனாதிபதிகள் முயற்சிக்கவில்லை. இருந்தும் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்குவது போன்று சகல வாக்குறுதிகளும் அளிக்கப்படுகின்றது. ஜனாதிபதியாகி ஆட்சியில் அமர்ந்ததும் அத்தனை வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விடப்பட்டு விடும்.

கடந்த காலங்களில் தமிழ் அரசியல் தலைமைகளும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கூறிவந்தனர். அவர்களின் கோரிக்கைகளை தமிழ் மக்களும் சிங்கள வேட் பாளருக்கு வாக்களித்தனர். ஆனால் அதனால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் நடக்கவில்லை.

இந்த நிலையில் தான் 2024ம் ஆண்டுக்கான ஜனாதிபதித்தேர்தலில் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன் நிறுத்தியுள்ளனர். அவர் ஜனாதிபதி ஆகின்றாரோ இல்லையோ அவருக்கு அளிக்கப்படும் வாக்குகள் அனைத்தும் சர்வதேசத்தின் கவனத்தைப் பெற வைக்க உதவும். அதே நேரம் சிங்களத்தரப்புக்கும் ஒரு அச்சத்தை ஏற்படுத்தும்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய பின் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் அடுத்தடுத்து தமிழ் மக்களின் ஆதரவைப் பெற வந்து போகும் நிலைமை காணப்படுகின்றது. இது வரை காலமும் இவ்வாறு நடந்தது இல்லை. இது தமிழ்ப் பொதுவேட்பாளரின் பலம் அத்தோடு அது தொடர்பில் அவர்களுக்கு இருக்கும் அச்சம் என்பவற்றை வெளிக்காட்டியுள்ளது.

எனவே தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது இன்றைய கால கட்டத்தில், சர்வதேசமாக இருந்தாலும் சரி, தேசிய ரீதியிலும் சரி மிக முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

### திருமதி ரஜனி ஜெயப்பிரகாஸ்

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் சூடு பிடித்துள்ள நிலையில், தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார்.காலம் காலமாக நாங்கள் சிங்கள தலைவர்களுக்கு வாக்களித்து சிங்கள தலைவர்களை ஏற்றுக் கொள்வதற்காகவும் சிங்கள தலைவர்களை ஜனாதிபதியாக்குவதற்கும் நாங்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரங்களை கடந்த காலத்தில் முன்னெடுத்திருந்தோம்.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் எங்கள் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், இந்த நாட்டில் பதவியேற்ற சிங்கள ஜனாதிபதிகள் தமிழ் மக்களுக்குரிய எந்த தீர்வினையும் நோக்கி பயணிக்காத நிலையில் இம்முறை தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார்.

காலம்காலமாக ஏமாற்றப்பட்டுவரும் ஒரு இனமாகவும் இலங்கை அரசாங்கம் எந்த நீதி பொறிமுறையினை முன்வைக்காத நிலையிலும் சர்வதேச நீதியும் விசாரணையும் வேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு இனத்தின் அடையாளமாக பொது வேட்பாளராக அரியநேத்திரன் காணப்படுகின்றார்.

தமிழ் தேசிய இனமாக நாங்கள் இந்த நாட்டில்எங்களுக்காகஉயிர்நீர்த்தவர்களுக்கான நீதிப்பொறிமுறைக்காக சங்கு சின்னத்திற்கு புள்ளடியையிட்டு பொதுவேட்பாளரை அங்கீகரிக்கின்றபோது சர்வதேசத்திற்கு ஒருமித்த குரலாக நாங்கள் ஒன்றிணைத்து எமது உரிமை தொடர்பாகவும் அடக்குமுறைகள் குறித்தும் ஒரு செய்தியை சொல்ல முடியும். நான் தொடர்ந்து தமிழ் தேசிய கொள்கையின் கீழ் பயணிப்பவள் என்ற காரணத்தினால் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிக்கின்றேன். கிழக்கு மாகாணத்தில் பொதுவேட்பாளருக்கு ஒவ்வொருத்தரும் தமது தனித்துவமான பங்களிப்பினை சங்கு சின்னத்திற்கு வழங்கும் புள்ளடிகள் ஒரு அங்கீகாரமாகத்தான் நான் பார்க்கின்றேன்.

### சிவில் செயற்பாட்டாளர்

என்றுமே இல்லாதவாறு தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை இம் முறை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்பட்டிருப்பது சிறுபான்மை சமூகத்தின் மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு வெளிப்பாடாக காணப்படுகிறது. பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவரே ஜனாதிபதியாக வர முடியும். ஆனால் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவர் போட்டியிட்டு வெற்றிபெறாவிட்டாலும் மக்கள் இதன் மூலம் தெளிவுபெற வேண்டும். அரசியலமைப்பில் ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக வர முடியாது என்று கூறவில்லை. எனவே இவ்வாறு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது சிறுபான்மை சமூகத்தின் வரவேற்கத்தக்க விடயமாக கருதப்படுகிறது.

### சிவில் செயற்பாட்டாளர்

வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் தமிழ், முஸ்லிம் மக்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். 75 வருட காலமாக அரசியல் தீர்வின்றி வாழும் நிலையில் தமிழ் பொது வேட்பாளர் என்பது ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தியிருப்பது முக்கியமானது. ஆனால் தமிழ் கட்சிகள் பல பிரிவுகளாக பிரிந்து காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையான், வியாழேந்திரன் யாழ்ப்பாணத்தில் அங்கஜன், டக்ளஸ் போன்றவர்கள் பல பிரிவுகளாக பிரிந்துள்ளனர். இது தமிழர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

### அகத்தியர் சுவாமிகள்
### தென்கையிலை ஆதீனம்

முற்றுமுழுதாக தமிழ்த் தேசத்தில் அக்கறை இருக்கின்றவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்றுதான் இருப்பார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் சிங்கள ஜனாதிபதிகளை தமிழ் மக்கள் தெரிவு செய்துகொண்டுதான் இருந்தனர். இதனால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. இனிமேலும் எதுவும் தமிழ் மக்களுக்காக சிங்கள தலைமைகள் செய்யப்போவதில்லை. 2024 மட்டும் மல்ல 3024ம் ஆண்டு வந்தாலும் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையினையும் செய்யப்போறதும் இல்லை. ஆக இருக்கிற சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களால் எதைச் செய்யலாமோ அதை

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# சிறிலங்காவின் ஜனாதிபதித்தேர்தலில் பொதுவேட்பாளர் அவசியமா?

வல்வை.ந.அனந்தராஜ்

2024ஆம் ஆண்டு; செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கையைச் சேர்ந்த பிரதான சிங்கள அரசியல் கட்சிகளான சுயேட்சையாகப் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க, தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அனுரகுமார திசநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சஜித் பிரேமதாச ஆகிய பிரதானமான அரசியல்வாதிகள் போட்டியிடுகின்றனர். இவர்களை விட மேலும் 33 அரசியல் கட்சிகள் களத்தில் இறங்கியுள்ளன.

இவர்கள் அனைவருமே தமிழர்களின் உரிமைகள் தொடர்பில் உரிமைகளை வழங்குவதில் பெரும்பாலும் ஒத்த கொள்கையையே கொண்டிருக்கின்றனர். இதுவரைக்கும் அனைத்துத் தேர்தல்களிலும் வழக்கமான பெரும்பான்மை இனக்கட்சிகளுக்கே தமிழர்கள் வாக்களித்து வந்துள்ளனர். இந்நிலையில் இந்தமுறையும் எந்தவிதமான ஒரு உத்தரவாமும் இல்லாது சரியான தீர்வுகளுக்கான வாக்குறுதிகளும் இன்றிப் பொருத்தமான தீர்மானம் எடுக்க முடியாத ஒரு நிமையில் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்? அல்லது யாருக்கு வாக்களிக்க வேணடும்? என்பதைப்பற்றி ஒரு முடிவுக்கும் வரமுடியாதவர்களாக தமிழ் மக்கள் உள்ளனர்;.

இந் நிலைமையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களித்தாலும், எவ்விதத்திலும் நன்மைகள் ஏற்படப் போவதில்லை என்பதைக் கடந்த எட்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் பார்த்திருக்கின்றோம். ஒவ்வொரு தேர்தலிலும் யாரோ ஒரு சிங்கள அரசியல்வாதி தலைவருக்குத் தமிழ்மக்கள் வாக்களித்துத் துன்பங்களையே அனுபவித்துள்ளனர். இந்த நிலைமையில் தற்போது நடை பெறவுள்ள 9 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சிந்தித்துக் குழம்பிப்போய் இருக்கின்ற நிலை யிலேயே 87 பொது அமைப்புக்களும், பத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுகூடி பொது வேட்பாளர் ஒருவரை, ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவைக்கவேண்டுமென்ற ஒரு காத்திரமான முடிவை எடுத்திருக்கின்றனர். இதிலும் சிங்களக் கட்சிகளுடன் அமைச்சர் பதவிகளுக்காக ஒட்டிக் கொண்டிருக்கின்ற சில தமிழ் அரசியல் வாதிகளைத்தவிர தமிழ் அரசியல்கட்சிகளுக்குள்ளும் தமிழ் மக்களைக் குழப்பும் வகையில், மாறுபட்ட கருத்துக்களையும், ஒன்றுக்குப்பின் ஒன்று முரண்பாடான செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.



இதில் தற்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றக் கதிரைகளைப் பிடித்து வைத்திருக்கும் பெரும்பாலான அரசியில் வாதிகளை தமிழ் மக்கள் நம்புவதற்குத் தயாராக இல்லை என்பதை அவர்களுக்கு எதிரான மக்களின் எழுச்சி வெளிப்படுத்துகின்றது. அவர்களை இன்று தமிழ் மக்கள் வெறுப்பதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- தமிழ் மக்களுக்கெதிராகப் பல்வேறு படுகொலைகள் நடந்தபோது எவராவது சரியான புள்ளிவிபர ஆதாரங்களுடன் பாராளுமன்ற அமர்வுகளில் பேசவில்லை.
- தமிழ் மக்கள் தொடர்பாக சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் சில அமர்வுகளில் கத்திப்பேசியபோது, ஏனைய பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்ருந்தனர்.
- தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களினால் அவர்களை வெளியேற்றிவிட்டு, சிங்களக் காடையர்களையும், விவசாயிகளையும் பணமும், ஆயுதங்களும் கொடுத்துக் குடியேற்றிய போதெல்லாம் மௌனமாக இருந்து வந்தனர்.
- பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட பொருளாதாரத்தையும்,நிதி வளத்தையும் பெருக்கிக் கொள்வதற்காகத் திரை மறைவில் ஜனாதிபதியுடனும், அமைச்சர்களுடனும் நல்லுறவைப் பேணித் தங்களுடைய பொருளாரத்தை மேம்படுத்தியிருக்கின்றனர்.
- சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசிடம் இருந்து மதுபானக் கடைகளை நடத்துவதற்கான அனுமதியைப் (Permit)பெற்று அந்த அனுமதிப் பத்திரத்தை வேறு நபர்களுக்கு விற்றிருக்கின்றார்கள்.சிலர் தமது உறவினர்களின் பெயரில் மதுபானக் கடைகளை நடத்தி வருகின்றனர்.
- சிலர் அரச காணிகளில் பல ஏக்கர் நிலங்களைப் பெற்றுத் தமது உடைமைகளாக்கிக் கொண்டு இன்று பெரும் நிலச்சுவாந்தர்களாக உள்ளனர்.
- தமிழ் மக்களின் மரபுரிமைச் சொத்துக்களும், மரபுச் சின்னங்களும் அழிக்கப்பட்டு அவை பௌத்த சின்னங்களாகவும்,சிங்கள கலாசார சின்னங்களாகவும் தொல்லியல் திணைக்களத்தின் சொந்தமாக்கி வருகின்ற நேரங்களில் பொது மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றபொழுது, வெறுமனே தமிழ்மக்களைத் திருப்திப் படுத்துவதற்காகத் தாங்களும் குரல் கொடுத்தார்களே ஒழிய அவர்களுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி உள்நாட்டிலோ அல்லது சர்வதேச ரீதியாகவோ ஆவணங்களை உரிய ஆதாரங்களுடன் சமர்ப்பித்து அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப் படவில்லை.
- போர் நடைபெற்று வந்த காலங்களிலும்,போர் முடிவடைந்த காலங்களிலும் அரச படைகளினால் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளையும், கணவன்மாரையும் தேடித் தேடி அலைந்தும் உண்ணாவிரதம் இருந்தும் வரும் தாய்மார், தந்தையர்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களுக்கானத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உள் நாட்டிலோ அல்லது சர்வதேச ரீதியாகவோ தொடர்புகளை மேற்கொண்டு அவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க எந்த ஒரு தமிழ் அரசியல் வாதியும் முன்வரவில்லை.
- தமது பாராளுமன்ற உறுப்பினர்களின் வேதனங்கள், தமக்கு வழங்கப் படுகின்ற மேலதிக படிகள், எரிபொருள் கொடுப்பனவுகள் போன்றவற்றை அதிகரித்து தரவேண்டுமென்று போராடினார்களே ஒழிய தங்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த அப்பாவிப் பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான எந்த நடவடிக்கைகளையும் எவருமே எடுக்கவில்லை.



வடக்குக் கிழக்கின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்காக மக்கள் பட்ட துன்பங்களும்,அர்ப்பணிப்புக்களும் அளப்பரியது. ஆனால் அவர்களால் எவ்வித பயனும் கிடைக்காத நிலையில்,அவர்களால் ஏமாற்றப்பட்ட விரக்தியில் தமிழ் பேசும் மக்கள் தமக்கான ஒரு தீர்வாகத் தமிழ் பொது வேட்பாளரைக் களமிறக்கி அவரது சங்கு சின்னத்தின் வெற்றிக்காக வடக்குக் கிழக்கு எங்கும் மலையகத்தின் பல பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும்,பெண்களும், மூத்தோர்களும், கல்வியியலாளர்களும்,வர்த்தகப் பெருமக்களும் கிராமம் கிராமமாக உழைத்து வருகின்றனர்.

அவர்களது தியாகங்களையும், எதிர்பார்ப்புக்களையும் சிதைப்பது போல்,

- தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகின்றது.இவர்கள் எந்தச் சிங்களவரை ஜனாதிபதியாக்கு வதற்காக இவ்வாறான பிரசாரங்களை ஏன் மேற்கொண்டு வருகின்றனர் என்பது புரியவில்லை. தமிழ்மக்கள் வாக்களித்தாலும், வாக்களிக்காவிட்டாலும் யாரோ ஒரு சிங்களவர் தான் ஜனாதிபதியாக வரப்போகின்றார். இந்தநிலையில் அவர்கள் என்ன நோக்கத்திற்காகத் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோருகின்றனர். ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின்கீழ் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலைப் பகஷ்கரிக்கவேண்டுமென்று கோருபவர்கள் அதே அரசியல் அமைப்புக்குள்ளேயே இடம் பெற்று வரும் உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைகள், பாராளுமன்றத் தேர்தல்களையும் பகிஷ்கரிக்குமாறு கோரினால் அதில் ஒரு நியாயம் இருக்கின்றது. ஏனெனில் தாங்கள் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோருவது எந்த வகையில் நியாயமானது. இந்த விடயத்தில் தமிழ்மக்கள் விழிப்பாக இருந்து, அத்தகையவர்களின் சுயநல அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


பிரித்தாள ஒருபோதும் இடமளியோம்
பா.அரியநேத்திரன்
පා.අරියනේත්‍රන්
P. Arianetheran
இம்முறை
தமிழர் வாக்கு
தமிழுக்கே என்றெழுவோம்


தமிழ் மக்களை தமிழ் கட்சிகளை
சிதறடிக்கும் அரசியல்வாதிகளை
நிராகரிப்போம்
தமிழா
மாத்தி யோசி


தமிழா
மாத்தி யோசி
முல்லைத்தீவில்
மட்டும் 67 பௌத்த விகாரைகள்
அமைக்கப்பட்டுள்ளன.
මුලතිව්
முல்லைத்தீவு
MULLAITIVU


இவர்களில் யாராவது இன
அழிப்புக்கு மன்னிப்பு
கேட்டிருக்கிறார்களா
?
தமிழா
மாத்தி யோசி


நான்கு தசாப்தங்களுக்கு
மேலான யுத்தத்துக்காக
தமிழ் மக்களிடம்
இதுவரையிலும் மன்னிப்பு
கேட்காத சிங்களத்
தலைவர்களை
நிராகரிப்போம்
தமிழா
மாத்தி யோசி


இன அழிப்பை ஏற்றுக்
கொள்ளாத இன அழிப்புக்கு
மன்னிப்பு கேட்காத எந்த ஒரு
தென்னிலங்கை வேட்பாளரையும்
நிராகரிப்போம்.
தமிழா
மாத்தி யோசி


அம்பாறை கல்முனை
வடக்கு தமிழ் பிரதேச செயலர் பிரிவை
முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம்
உயர்த்துமாறு தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப்
போராடி வருகிறார்கள். இன்றுவரை எந்த
அரசாங்கமும் இதனை தீர்க்க விரும்பவில்லை.
ஏமாந்தது போதும் தமிழா விழித்தெழு!


වවුනියාව
வவுனியா
VAVUNIYA
வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் குளம் என்ற
தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் குடியிருப்பு
இராணுவப் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும்
ஆக்கிரமிக்கப்பட்டு 'கலாபோபஸ்வேவ' என்ற
பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு
மிகக்குறுகிய காலத்துக்குள் அந்த கிராமத்துக்குத்
தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் செய்து
கொடுக்கப்பட்டுள்ளன.
ஏமாந்தது போதும் தமிழா விழித்தெழு!


தமிழா
மாத்தி யோசி
15 கடந்த ஆண்டுகளில் நாங்கள்
வாக்களித்த ஜனாதிபதி
வேட்பாளர்களில் யாராவது தமிழ் மக்களிடம் இன
அழிப்புக்காக மன்னிப்பு கேட்டிருக்கிறார்களா?
மே 18


மயிலத்தமடு
மாதவனை
3000
குடும்பங்களின்
வாழ்வாதாரமான கால்நடை சார்
பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு
மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில்
மேய்ச்சல் தரைகளை அரச
அனுசரணையோடும் பாதுகாப்போடும் சிங்கள
விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள்.
ஏமாந்தது போதும் தமிழா விழித்தெழு!


குருந்தூர் மலை,
வெடுக்கு நாறிமலை,
நீராவியடி ஆகிய இடங்களில்
தமிழர் மரபுரிமைச் சின்னங்களை
அழித்து பௌத்த கட்டுமானங்களை
உருவாக்கி வருகிறார்கள்.
ஏமாந்தது போதும் தமிழா விழித்தெழு!


වවුනියාව
வவுனியா
VAVUNIYA
வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் குளம் என்ற
தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் குடியிருப்பு
இராணுவப் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும்
ஆக்கிரமிக்கப்பட்டு 'கலாபோபஸ்வேவ' என்ற
பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு
மிகக்குறுகிய காலத்துக்குள் அந்த கிராமத்துக்குத்
தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் செய்து
கொடுக்கப்பட்டுள்ளன.
ஏமாந்தது போதும் தமிழா விழித்தெழு!

# சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமிழ் தேசிய அரசியலை கட்டியெழுப்பமுன்வரவேண்டும்

கிழக்கில் தமிழ் பொதுவேட்பாளருக்கான ஆதரவுத்தளம் என்பது அதிகரித்துவருவதை காணமுடிகின்றது.இலங்கையில் எந்த ஜனாதிபதியும் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தாத நிலையில் தமிழ் பொதுவேட்பாளராவது எமது பிரச்சி்னைய பேசட்டும் என்ற வகையில் தமிழர்கள் பொதுவேட்பாளரின் பின்பாக அணி திரள்வதை காணமுடிகின்றது.

வடகிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சி நிலைமையானது தெற்கில் வேட்பாளர்களுடையே ஒரு அச்ச நிலைமையினை ஏற்படுத்தியுள்ளதே உண்மையாகும்.அதன் காரணமாகவே தெற்கினை நோக்கிய வகையில் சிங்கள பெரும்பான்மை கட்சிகள் முகாமிட்டுள்ளதை காணமுடிகின்றது.

தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் ஆரம்பத்தில் ஆர்வமற்றிருந்த தமிழர்கள் பின்னர் ஆர்வம்காட்டும் நிலைமையினை காணமுடிகின்றது.கிழக்கில் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களுக்கான தீர்வு கிடைக்காவிட்டாலும் கிழக்கில் முன்னெடுக்கும் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை இலங்கைக்குள்ளும் சர்வதேசத்திற்கும் கொண்டுசெல்லும் வாய்ப்பாக இந்த பொதுவேட்பாளரை பயன்படுத்தமுடியும் எனதமிழ் மக்கள்கருதும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் ஏற்பட்ட குழப்ப நிலைமையானது தமிழ் மக்களை விழிப்படையச் செய்துள்ளது. சத்துருக்கொண்டான் படுகொலையென்பது கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரும் படுகொலையாக கருதப்படுகின்றது. 1990களிம் கிழக்கில் தமிழர்கள் இலக்குவைத்து பல படுகொலைகள் நடைபெற்றன. அவற்றில் சத்துருக்கொண்டான் படுகொலையென்பது மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது.ஒரு இரவில் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்ட பொதுமக்கள் குடும்பம்குடும்பமாக படுகொலைசெய்யப்பட்ட துயரச்சம்பவம் நடைபெற்றது.இதில் சிறுவர்கள், கர்ப்பிணிகள், பெண்கள் என 186பேர் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நினைவுத்தூபியொன்று பனிச்சையடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உயிர்நீர்த்தவர்களின் ஞாபகார்த்தமாகவும் இந்தபடுகொலையின்பின்னணியில்இருந்தவர்கள் தொடர்பிலான விடயங்களும் அடங்கிய கல்வெட்டு பொறிக்கப்பட்டது.இதன்போது அங்கு வந்த பொலிஸாரும் படையினரும் குறித்த கல்வெட்டை அகற்றி அங்கிருந்து பொது மக்களை இழுத்துச்செல்லும் அராஜகமான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது பொலிஸாரும் படையினரும் மிக மோசமான முறையில் நடந்துகொண்டனர். சத்துருக்கொண்டான் படுகொலை தொடர்பில் சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட பாலகிட்னர் ஆணைக்குழுவில் குறித்த சம்பவங்களுடன் படையினர்,ஊர்காவல் படையினர் தொடர்புபட்டது குறித்து ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டு குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டது.இந்த படுகொலை தொடர்பில் பாலகிட்னர் அறிக்கையில் உறுதிப்படுத்தியிருந்த நிலையில் அதனை கல்வெட்டில் பதித்ததை சட்டத்திற்கு முரணானது என கூறி படையினரும் பொலிஸாரும் நடந்துகொண்ட முறையானது அப்பகுதி தமிழ் மக்கள் மத்தியில் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அருட்தந்தை ஜோசப்மேரி அவர்கள் தமிழ் மக்களின் படுகொலைகள் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளுக்கு எதிராக போராடவேண்டிய நிலை தமிழர்களுக்கு உள்ளது.இவ்வாறான நிலையில் நாங்கள் பொதுக்கட்டமைப்பினர் கொண்டு வந்துள்ள தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிக்க வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது எனவும் தெரிவித்தார்.சிங்கள தலைவர்கள் என்றைக்கும் தமிழர்களின் பிரச்சினைகளை உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.அவர்களுக்கு தமிழர்கள் தொடர்பில் சிந்திப்பதற்கு தேவையில்லை.நாங்கள் தான் எங்கள் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு கொண்டுசெல்லவேண்டும். அதற்கான ஒரு சிறந்த வாய்ப்பு இந்த தேர்தல்.நாங்கள் நிறுத்தியுள்ள தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலமே எமது பிரச்சினையை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் கொண்டுசெல்லமுடியும் எனவும் அருட்தந்தை தெரிவித்தார்.



உண்மையில் இவ்வாறான எண்ணப்பாடுகள் இன்று கிழக்கில் உள்ள அநேகமான தமிழர்களிடம் ஏற்பட்டுள்ளது.கடந்த காலத்தில் சிதறிப்போயிருந்த தமிழ் தேசிய ஆதரவாளர்களை ஒருங்கிணைக்கும் தளமாக இன்று பொது வேட்பாளர் எண்ணக்கரு மாற்றம்பெற்றுள்ளது.

இன்று தேர்தலைப்புறக்கணிக்கவேண்டும் என்று கூறும் தமிழ் தேசிய சக்திகளும் சிங்கள வேட்பாளரை தெரிவுசெய்யவேண்டும் என்று கூறும் தமிழ் தேசிய சக்திகளும் இன்று தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைக்கு கொண்டுவரும் வகையில் தமிழ் மக்களின் ஆதரவு இன்று பொதுவேட்பாளருக்கு அதிகரித்து வருகின்றது.

வெறுமனே வாக்குகளை மட்டும் நோக்காக கொண்டுசெயற்பட்டுவரும் தமிழ் தேசிய கட்சிகளுக்கு இந்த தேர்தல் சிறந்த பாடத்தினை புகட்டுவது மட்டுமல்ல தமிழ் தேசிய கட்சிகளின் ஒன்றுபட்ட பலத்தினையும் வெளிப்படுத்துவதற்கான களமாகவும் பொது வேட்பாளர் காணப்படுகின்றார்.இவ்வாறான நிலையில் இந்த பொதுவேட்பாளரினை ஆதரிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு இன்று தமிழ் சமூகத்திற்கு உள்ளது.

இறுதி யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர்தமிழர்கள்நம்பிக்கைகொண்டதமிழ்தேசிய சக்திகள் தங்களுக்குள் மாறிமாறி முன்னெடுத்த வாக்கு வங்கிகளை தக்கவைப்பதற்கான அரசியல் காரணமாக தமிழ் தேசிய அரசியல் பாரிய பின்னடைவினை எதிர்கொண்டது.காலத்திற்கு காலம் தமது சுய அரசியலுக்காகவும் தமது சொந்த நலனுகளுக்காகவும் தமிழ் தேசியத்தினை அடகு வைத்த தமிழ் தேசிய அரசியல் பரப்பிலுள்ள அரசியல் கட்சியை சார்ந்தவர்களுக்கு வயிற்றில் புளியைக்கரைக்கும் செயற்பாடுகளாக இன்று தமிழ் தேசிய அரசியல் மாற்றம்பெற்று நிற்கின்றது.

இன்று கிழக்கினைப்பொறுத்த வரையில்

**மட்டு.நகரான்**

தமிழர்கள் மத்தியில் தமிழ் தேசியம் சார்ந்த வகையில் புரிதல்கள் அதிகரித்துவருகின்றன. வெளிப்படையாக தமிழ் தேசியத்தினை ஆதரிக்க தயங்கியவர்கள் இன்று வெளிப்படையாக ஆதரித்து நிற்கும் நிலைமையினை காணமுடிகின்றது. பொதுவேட்பாளர் என்ற ஆயுதம் இந்த வெளிப்படுத்தல்களை கச்சிதமாக செய்துவருகின்றது.உள்ளக்குமுரலாகயிருந்தவர்கள் இன்று வெளிப்படையாக தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தும் நிலைமையினை காணமுடிகின்றது.

இதற்கு ஆதாரமாக கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் தமது ஆதரவினை பொது வேட்பாளருக்கு அறிவித்ததுடன் தமது உள்ளத்திலிருந்து ஆதங்கத்தினையும் வெளிப்படுத்தியிருந்தது.

“இன்று எமது மக்கள் ஆண்டாண்டு காலமாக தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களினால் எமது இனம் மிகவும் மோசமாக வஞ்சிக்கப்பட்டது தமிழர்கள் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டார்கள் எமது இனம் கொன்றொழிக்கப்பட்டது இவை அனைத்தையும் இதுவரை காலமும் நாங்கள் அனுபவித்து வந்திருக்கின்றோம். எங்களது இனம் தேசியம் சுய நிர்ணயம் ஆகியவற்றை நாங்கள் பெற வேண்டுமாக இருந்தால் உங்களுக்காக அந்த வலுவான சக்தியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமாக இருந்தால் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதனை சர்வதேசத்திற்கும் இலங்கையில் மாறி மாறி வருகின்ற பௌத்த அரசியல்வாதிகளுக்கும் எடுத்துக்காட்டுவதற்காகவும் இந்த தேர்தல் ஒரு முக்கியமான களமாக அமைந்திருக்கின்றது.

முதல் முறையாக வடகிழக்கில் இருக்கின்ற தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியத்தின் பால் உறுதிபூண்டு அனைவரும் ஒற்றுமையாக எமது ஜனாதிபதி தேர்தலிலே மற்றவர்களுக்கு நாங்கள் எடுத்துக்காட்டாக இந்த பொது வேட்பாளர் அவர்களை நாங்கள் ஆதரிக்க வேண்டும். அது மாத்திரம் இல்லாமல் இரு ஜனாதிபதி தேர்தலிலே பொது வேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக போட்டியிடவில்லை எமது மக்களுடைய ஒற்றுமை எங்களுடைய உரிமைக்காக நாங்கள் குரல் கொடுப்பதற்கு எல்லோரும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டும் என்பதற்காக முதல் முறையாக ஒரு படிக்கல்லாகவே இதனை நாங்கள் கருதுகின்றோம்.”என கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ கணேச லோகநாதன் குருக்கள் பொதுவேட்பாளர் தொடர்பில் தெரிவித்திருந்தார்.

இவற்றினை நாங்கள் வெறுமனே வார்த்தைகளாகவும் ஒரு சந்தர்ப்பவாதமாகவும் கருத முடியாது.இதுவே இன்று கிழக்கு தமிழர்களின் உணர்வு இந்த உணர்வினை சரியான முறையில் வழநடாத்தவேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்புக்கு உள்ளது.இன்னமும் கிழக்கில் சரியான வகையில் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு செயற்படாமை கவலைக்குரிய விடயமாகயிருந்தாலும் இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமிழ் தேசிய அரசியலை கட்டியெழுப்பமுன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

• • •

# தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தின் திறந்த மடல் !



*தமிழின எழுச்சியின் தடைகள் உடைத்து தமிழர் தேசமாய் அணி திரள்வோம்!*

**பேரன்புமிக்க தமிழ் மக்களிற்கு வணக்கம்,**

நூற்றாண்டுகள் கடந்த கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளிற்குள் (Structural Genocide) சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள் எங்களின் அரசியல் விடுதலைப் பயணத்தில் தவிர்க்க முடியாதவொரு தேர்தலாக எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் மாறியுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகமாக இம்மடலினை எங்கள் பேரன்புமிக்க தமிழ் மக்களை நோக்கி மாணவர்கள் நாங்கள் எழுதுகின்றோம்.

**தமிழ் மக்கள் உதிரிகளாக்கப்படுதலும் கூட்டு மனவலு சிதைக்கப்படுதலும்**

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் தமிழ் மக்கள் தேசமாகச் சிந்திப்பதிலிருந்தும், எழுச்சியடைவதிலிருந்தும் எங்களை விலகியிருக்கச் செய்வதில் சிங்கள - பௌத்த பேரினவாதம் ஏறக்குறைய வெற்றியடைந்திருக்கின்றது. சாதிகளாக, மதங்களாக, பிரதேசங்களாக தமிழ் மக்களையும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளையும் உதிரிகளாக்கி, எங்களின் கூட்டு மனவலுவைத் தகர்த்தெறிந்து உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனோநிலையினை எங்கள் மக்களிடையே விதைப்பதனை சிறிலங்கா அரசின் முகவர்களும் அவர்களது அமைப்புக்களும் கன கச்சிதமாகச் செய்து முடித்துள்ளன.

தமிழ் மக்களினது அரசியற் பலத்தினையும் எழுச்சியினையும் இல்லாதொழிப்பதற்காகச் சாணக்கியம், ராஜதந்திரம் என்று பெயரிட்டு தமிழ்த் தரப்புகளால் முன்னெடுக்கப்பட்ட வெற்றுக் காசோலை அரசியல் பயன்படுத்தப்பட்டது. அதன் விளைவே கடந்த 2010, 2015, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் தமிழ் இனப்படுகொலை பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் (Genocide) குற்றத்தைப் புரிந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கு வாக்களித்தோம். பரிகார நீதியைக் கோர வேண்டிய நாம், எமது அரசியற் தலைமைகளினால் கண்மூடித்தனமாக வழிநடத்தப்பட்டோம்.

**எம்மைச் சூழும் பொருளாதார நல்லிணக்க மாயைகள்!**

சிறிலங்காவின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வங்குரோத்து நிலையைக் காரணங்காட்டி கவர்ச்சிகர வாக்குறுதிகளை முன்வைத்து வரும் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் முகவர்கள் நாட்டின் இந்நிலைக்குத் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளும், வலிந்து திணிக்கப்பட்ட போருமே அடிப்படைக் காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

அடிப்படையில் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு அரசியல் உறுதித் தன்மை அவசியமாக உள்ள நிலையில், தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள், ஒடுக்குமுறைகளை நிறுத்தும் சித்தம் ஏதுமின்றி, தமிழ் மக்களின் உரிமைக்கான குரல்களை இனிப்புத் தடவிய வார்த்தை ஜாலங்களினால் அறுத்தெறியும் பணிகளிலேயே நாட்டமும் மும்முரமும் காட்டுகின்றனர். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பையோ அல்லது பௌத்தத்திற்கு முதன்மை வழங்கும் அதன் கட்டமைப்பையோ இவர்கள் எவரும் கேள்விக்குள்ளாக்காமல் நல்லிணக்கம் பேசுவதென்பது அற்ப வாக்குகளிற்காகவேயன்றி வேறெதற்காக?

**தமிழர் தேசமாய்த் திரள்வோம் !**

தொடர்ந்தும் தமிழர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை எதிர்கொள்வதற்கேற்ற பலமானதொரு திரளாக அரசியல் மற்றும் கட்டமைப்பு ரீதியாகத் தமிழ் மக்கள் நாங்கள் எழ முடியாது உதிரிகளாக்கப்பட்டு, கூட்டு மனவலு சிதைக்கப்பட்டுள்ளது. இக்கையறு நிலையாவது கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து, சுதாகரித்து முன்னகர வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம்.



அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற ஒற்றையாட்சி, அரசியலமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தினுள் தமிழரின் அரசியலை சுருக்கியது என்பது சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி என்பதோடு, தமிழ் மக்களிற் கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ள வல்ல திடசித்தமுள்ள தலைவர் ஒருவரையேனும் சிங்கள மக்கள் மத்தியில் காண முடியவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளில் பயணிப்போர்கள் அனைவரும் தமிழினத்தின் விடுதலைக்கு, மேன்மைக்கு உழைப்பவர்கள் என்று நம்பி ஏமாந்த எங்களுக்கு, புலித்தோல் போர்த்திய நரிகளின் ஊளையிடுதல்களையும் கூச்சல்களையும் உதறித்தள்ளி, தமிழர் தேசமாக, எங்கள் தலைவிதியை நாங்களே மாற்றி எழுதும் பெருவாய்ப்பு இனப்படுகொலை நிகழ்ந்து 15 ஆண்டுகளின் பின் கனிந்துள்ளது.

**தமிழரை அணிதிரட்டி வெல்லட்டும் தமிழ்ப் பொதுவேட்பாளர் !**

தமிழ் மக்களைத் தேசமாய் அணி திரட்டுவதற்கும், பன்னாட்டுச் சமூகங்களிற்கு விடுதலைக்கான எங்களின் கூட்டு வேட்கையினையும், கூட்டு மனோபலத்தினையும் வெளிப்படுத்துவதற்கும் எங்களிற்குள்ள ஒரேயொரு வாய்ப்பாகத் தமிழ்ப் பொதுவேட்பாளர் எண்ணக்கருவினை நாங்கள் பலப்படுத்த வேண்டும். இது ஒரு காத்திரமான வழிமுறை. இது எமது வரலாற்றுக் கடமை. தமிழ்ப் பொதுவேட்பாளர் சிறிலங்காவின் அரச தலைவர் இருக்கையை வெல்லப் போகின்றவரல்ல ; மாறாக தமிழ் மக்களை அணிதிரட்டுவதில் வெல்லப் போகின்றவர்.

இனியாவது ஏமாற்றும் கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புக்களுக்கோ சென்று சேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களைத் தமிழ் மக்கள் கூட்டாக மேற்கொள்ள வேண்டும். தவறுவோமேயானால் நாங்கள் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

நாங்கள் மாறி மாறி சிங்கள ஆட்சியாளர்களுக்கு வாக்களிக்க வழிநடத்தப்பட்டோம். இதனால் தமிழ் மக்களின் நிலை, அரசியல், சமூக ரீதியில் பரிதாபகரமாய்ப் போனதேயன்றி வேறேதும் நிகழவில்லை. உரிமைகளுற்கான தமிழரின் அரசியல் இன்று சலுகைகளுக்காகத் துவண்டு போயுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள திரு.பா.அரியநேத்திரன் அவர்களுக்கு, அவரின் சங்குச் சின்னத்திற்கு வாக்களிப்போம். மாற்றுக் கருத்துக்கள் இருப்பினும், கட்சி வேறுபாடுகள் கடந்து வடக்கு – கிழக்கு, மலையகம், இதர பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும், சங்கு சின்னத்திற்கு வாக்களித்து எங்கள் திரட்சியை, இத் தேர்தலில் வெளிப்படுத்துவோம்.

*எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்!*
*இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!!!*

**உரிமைகளுடன் கோரி நிற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம்**

# நவாலியின் துயரம் நிறைந்த படுகொலைகள்

இறுதிப் பகுதி



"சிலருக்குச் சேடம் இழுக்கும்போது ஏற்படும் சுடலைஞானம்" போன்று சந்திரிகா பண்டார நாயக்காவும் ஜனாதிபதியாக இருந்தபொழுது முப்படைகளையும் ஏவிவிட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது குண்டு வீசித் தமிழ்மக்களைக் கொன்றொழிக்குமாறு உத்தரவிட்டு அதன் அழிவுகளால் பூரிப்படைந்த நிலையில், 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 2020இல், மீண்டும் தேர்தல்காலம் நெருங்கும்போது நவாலியின் மீதான படுகொலைகள், விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுகள் தான் என்பதை ஒப்புக்கொண்டதுடன், இதுதொடர்பாக முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் 1995இல் நவாலி படுகொலைகளை மேற்கொள்ள உத்தரவிட்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா நவாலிப் படுகொலைக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று நவாலிப்படுகொலை நடைபெற்றுப் பல ஆண்டுகளுக்குப் பின்னர், 2019ஆம் ஆண்டில் மைத்திரிபாலசிறிசேன - ரணில் விக்கிரமசிங்கா ஆட்சிக்காலத்தில் தெரிவித்திருந்தார். நவாலிப் படுகொலைக்கு இலங்கை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று சந்திரிகா கூறினாலும் இந்தச் சம்பவம் இடம்பெற்று 24வருடங்களின் பின்னர், தனது ஆட்சியை இழந்த நிலையில், இலங்கையில் ஒரு ஆட்சிமாற்ற அரசியல் வேண்டும் என்பதை நோக்காகக்கொண்டே தேர்தல் காலத்தில் அவர் இப்படிப் பேசியுள்ளார். சந்திரிக்கா பண்டாரநாயக்காவினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளைப் பின்பற்றித்தான் பின்னர், மருத்துவமனைகள்மீதும், பாடசாலைகள்மீதும், ஆலயங்கள்மீதும், பதுங்குகுழிகள்மீதும், போர் தவிர்ப்பு வலயங்கள்மீதும் இராஜபக்சாவின் ஆட்சியில் குண்டுகளை வீசி அழித்தனர்.

### இலங்கையின் போர்க் குற்றவாளிக்குப் பிரான்ஸ் அரசு வழங்கிய அதிஉயர் விருது:

நவாலி படுகொலைகளின் சூத்திரதாரியும் போர்க்குற்றவாளியுமான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆட்சியில் தேவாலயங்கள், இந்து ஆலயங்கள், பாடசாலைகள்மீது குண்டுவீச்சு மற்றும்; பாரிய இராணுவப்படையெடுப்புக்களின் மூலம் எண்ணற்ற தமிழ்மக்களைக் கொன்றுகுவித்த போதிலும், அவற்றைக் கவனத்தில் எடுக்காது, *2018ஆம் ஆண்டு* "சமாதானமும் நல்லிணக்கமும் நோக்கிய செயல்பாடுகளுக்காக", பிரான்சின் உயரிய தேசியவிருதான "*Commandeur de la Légion D'Honneur*" பதக்கமும் அவருக்கு வழங்கப்பட்டது.





**வல்வை.ந.அனந்தராஜ்**

கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான பிரான்ஸ் தூதுவர் *Jean-Marin Schuh* அவர்கள் பிரெஞ்சுக் குடியரசின் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் சார்பாக இவ்விருதும், பதக்கமும் சந்திரிகா குமாரனதுங்காவிற்கு வழஙகப்பட்டது..

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா *1994* முதல் *2005* வரை இலங்கையின் ஜனாதிபதியாகப் பணியாற்றினார், அந்தக் காலகட்டத்தில், அவரது பணிப்பின்பேரில் இராணுவம் பல தாக்குதல்களை நடத்தியதால், கடுமையான மோதல்கள் நடைபெறும் பொழுது, நேரடியாகவே அவற்றை மேற்பார்வையிட்டார். 1995இல் நவாலி தேவாலய குண்டுவெடிப்பு, 1995இல் நாகர் கோவில் மாணவப் படுகொலைகள், அரை மில்லியனுக்கும் அதிகமான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட்ட தமிழ் மக்களின் வெளியேறத்திற்கு வழிவகுத்து இனப்படுகொலை புரிந்த சந்திரிகாவுக்கான இந்த உயர்விருதை பிரான்ஸ் அரசு வழங்கியுள்ளது. மேலும் அவரது பதவிக்காலத்தில்தான் ஊடக சுதந்திரத்தின் மீதான ஒடுக்கு முறையும் காணப்பட்டது, அவரது அரசாங்கம் வடக்கு-கிழக்கில் இருந்து வெளியிடப்படும் அறிக்கைகள், செய்திக் குறிப்புக்களைத் தணிக்கை செய்ததுடன், பத்திரிகைத் தணிக்கையும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதே வேளை இவரது காலத்திலேயே பல ஊடகவியலாளர்கள் கொல் லப்பட்டனர் சந்திரிகாவின் சாதனைகளுக்கான விருதுவழங்கும் நிகழ்வு, பிரான்ஸ் தூதரகத்தில் நடைபெற்றபொழுது, கலந்து கொண்டவர்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உட்படப் பல இராஜதந்திரிகள் மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் வாழ்த்துத் தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### உலகம் முழுவதும் நினைவு கூரப்படும் நவாலி தேவாலயப் படுகொலைகள்:

நவாலி புனித பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது குண்டுகளை வீசி 153 வரையான பொது மக்களைக் கொன்றொழித்த அந்தத்துயரம் தோய்ந்த சம்பவங்களை நினைவுகூரும் வகையில் ஆண்டு தோறும் ஜூலை 9 ஆம் திகதி நவாலி புனித பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் இறை வழிபாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

நவாலியில் உள்ள பொதுமக்களின் நினைவுச்சின்னத்துக்கு மதகுருக்களும், பொது மக்களும் அஞ்சலி தெரிவிக்கின்றனர்.

இத் தாக்குதலில் உயிரிழந்த நூற்றி ஐம்பத்தைந்திற்கும் மேற்பட்ட மக்களின் நினைவாக, நவாலி மக்கள் தேவாலயத்தின் வடக்குப் பக்கமாக நினைவுத்தூபி ஒன்றை அமைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள். அதேபோன்று நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் மகாவித்தியாலயத்திலும் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நவாலியில் ஸ்ரீலங்கா அரச படைகளினால் கொல்லப்பட்ட தமிழ் உறவுகளுக்கு ஒவ்வொரு வருடமும் இதேநாளில் நவாலியிலும், தாயகத்தின் ஏனைய பகுதிகளிலும், புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளிலும் வணக்க நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நினைவுகூரப்படுகின்றது.

### படுகொலைகளுக்கான மன்னிப்பை இலங்கை அரசு கோரவேண்டும்:

நவாலிப்படுகொலை, நாகர்கோயில்மகாவித்தியாலயப் படுகொலை, வல்வெட்டித்துறை ஊறணிப் படுகொலை, முள்ளிவாய்க்கால் படுகொலைகள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கான படுகொலைகளுக்கு ஸ்ரீலங்கா அரசு ஈழத்தமிழர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும். சிங்கள பேரினவாத அரசுகளினால் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக 1949இல் இங்கினியாகல கரும்புத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் இனப் படுகொலைகளில் ஆரம்பித்து கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுவந்த கொடுமைகளையும், இழைத்த துயரங்களையும் உளப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்



வாறு அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்களையும், படுகொலைகளையும், அநீதிகளையும் ஏற்றுக்கொள்ளமறுத்துத் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைகளை மேற்கொண்டுவந்தால், எந்தவொரு நிலையான தீர்வையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும்; சூழல் உருவாகமாட்டாது. "உண்மையான நல்லிணக்கம் கடந்தகாலத்தை மறந்துவிடுவதன் மூலம் உருவாகாது" என்று நெல்சன் மண்டேலா குறிப்பிடுவது போன்று கடந்தகாலத் தவறுகளை மறந்துவிடாது, நெஞ்சில்நிறுத்தி அவற்றைச் சீர்செய்வதற்காக இதயசுத்தியுடன் ஒவ்வொரு அரசியல் தலைவரும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களும் செயற்படுவார்களாக இருந்தால "ஸ்ரீலங்கா" என்ற அழகிய தீவு, அதிசயம் நிறைந்த ஒரு நாடாக உலகில் மிளிர்ந்துநிற்கும்.

முற்றும்

# உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைவோம்...

ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கை நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் இம் மாதம் செப்டம்பர்21 ம் திகதி இடம் பெறவுள்ள நிலையில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாடு தழுவிய ரீதியில் சூடு பிடித்துள்ளது.

இதனால் வடக்கு கிழக்கு உட்பட தென்னிலங்கை அரசியல் நிலவரம் வெவ்வேறாக மும்முனைப் போட்டி நிலவி வருகிறது.

இம் முறை 39 வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர். இருந்த போதிலும் பிரதான வேட்பாளர்களாக சுயேட்சையாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியில்இலங்கைநாடாளுமன்றத்தின்எதிர்க்கட்சி தலைவராக செயற்பட்டு வரும் சஜீத் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியில் அநுர குமார திசாநாயக்க, பொதுஜன பெரமுனவின் சார்பில் நாமல் ராஜபக்ச ஆகியோர்கள் காணப்படுகிறார்கள்.

இவர்களுக்கான மும்முனைப் போட்டி நிலவுகின்ற போதும் ஒவ்வொருவரும் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை பல பக்கங்களை கொண்டமைந்ததாக வெளியிட்டுள்ளனர். இருந்த போதும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடிய உத்தரவாதமளிக்கப்பட்ட மக்களுக்கான சாதகமான நிலைகாணப்படுவது குறைவாக உள்ளது. இதனால் ஜனாதிபதி வேட்பாளர்களில் வெற்றியடைந்தவராக கருதப்பட்டு ஜனாதிபதி யான பின் குறித்த விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட விடயங்கள் மக்களுக்காக அமுல்படுத்தப்படுமா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.



வடக்கு கிழக்கு தமிழ் சமூகம் 'நமக்காக நாம்' என்ற ரீதியில் தமிழ் பொதுக் கட்டமைப்பின் சார்பில் தமிழ் பொது வேட்பாளரான பா.அரியநேத்திரனை களமிறக்கி உள்ளதால் பிரதான கட்சிகளுக்கு அது சவாலாக அமைந்துள்ளது எனலாம். அனல் பறக்கும் தேர்தல் பரப்புரை கூட்டங்களை தற்போது இவர்களால் முன்னெடுக்கப்படுகின்றது. இருந்த போதிலும் தமிழ் மக்களுடைய வாக்குகள் கணிசமான அளவு கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒற்றையாட்சி நீக்கப்படும் என எந்தவொரு பிரதானவேட்பாளரும்உத்தரவாதம்அளிக்காததால் தமிழ் தேசிய மக்கள் முண்ணனியினர் ஒரு புறம் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்குமாறு வடக்கு கிழக்கில் உள்ள பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களையும் வழங்கி வருகின்றனர்.

கடந்த வாரம் திருகோணமலையில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவினரிடமும் இதனை தெரிவித்தனர்.

இருந்த போதிலும் தமிழ் கட்சிகளில் சில ஒவ்வொரு பிரதான வேட்பாளர்களையும் ஆதரித்த போதிலும் பொதுக்கட்டமைப்பில் இருந்து தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி சிறுபான்மை மக்களுக்கான குரலாக செயற்பட முனைகின்றனர். இதனை மக்கள் உணர்ந்து தங்களுக்கு வாக்குகளை அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

2024 செப்டம்பர் 21ல் இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மொத்தமாக இலங்கையில் 17,140,354 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். 2019ல் நடந்த தேர்தலில் இந்த தொகையானது 15,992,096 ஆக காணப்பட்டு தற்போது அதிகரிப்பினை காட்டுகிறது.

எது எவ்வாறாக இருந்தாலும் தேர்தல் கள நிலவரம் தற்போது சூடு பிடித்துள்ள நிலையில், ஜூலை 31-செப்டம்பர் 10ம் திகதி வரை 3406 தேர்தல் சட்டமீறல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 54858 அஞ்சல் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்ற நிலையில் இம் மாதம் 4,5,6 ம் திகதிகளில் அஞ்சல் வாக்களிப்பு இடம் பெற்றுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் 2024ம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தலில் மொத்தமாக 315,925 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். ஆனால் 2019 ம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலில் 288,868 ஆக காணப்பட்டது. இது போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 449,686 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில், 2019ல் 409,808 ஆக காணப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் இம்முறை 555,432 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் 2019தேர்தலின் போது அது 513,979 ஆக காணப்பட்டது.

இவ்வாறு இம் முறை வாக்காளர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பை காட்டுகிறது.

இருந்த போதிலும் 2005ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 50.29 வீதமான வாக்குகளை பெற்று மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியானார்.

இது போன்று 2019ல் 52.25 வீத வாக்குகளை பெற்று கோட்டாபாய ராஜபக்ச ஜனாதிபதியானார். ஆனால் இம் முறை பிரதான வேட்பாளர்களுள் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை எந்தவேட்பாளரும் பெறமாட்டார்கள் என்ற கணிப்பும் மக்கள் மத்தியில் நிலவி வருகிறது. மேலும் மக்கள் மத்தியில் பல தரப்பட்ட கருத்து கணிப்புக்களும் போலி வதந்திகளும் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (CAFFE) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் கருத்து தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் தொடர்பில் சமூகஊடகங்களின்ஊடாகபொய்ப்பிரசாரங்களும், அதேப்போன்று வெறுப்பூட்ட கூடிய பிரசாரங்களும் அதிகரித்துள்ளன. அத்துடன் 2019 ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பை காட்டுகிறது.

தேர்தலுக்கு முந்திய காலப்பகுதிகளில் சமூக ஊடகங்கள் தொடர்பில் கஃபே அமைப்பின் கண்காணிப்பாளர்கள் மேற்கொண்ட கண்காணிப்புகளின்படி, 5 வேட்பாளர்களை இலக்கு வைத்து வெறுப்பூட்டகூடிய பிரசாரங்கள், பொய்யான செய்திகள் மற்றும் தவறான தகவல்கள் பகிரப்படுவது தெரியவந்துள்ளது. இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு தடையாக இருப்பதாகவும் அதேபோன்று அமைதியான தேர்தலுக்கு தடையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சமூக ஊடகங்களின் மூலம் பொய்யான மற்றும் வெறுப்பூட்ட கூடிய பிரசாரங்களால் வன்முறை அதிகரிக்ககூடிய வாய்ப்புக்கள் உருவாகலாம் என கஃபே அமைப்பு எச்சரித்துள்ளது.

அத்துடன் வாட்ஸப் குழுமங்ககளிலும், பேஸ்புக் குழுமங்களிலும் இதுபோன்று பொய்ப் பிரசாரங்கள் மற்றும் வெறுப்பூட்டுகின்ற பிரசாரங்கள் தொடர்பில் பாதகமான வீடியோ பதிவுகள் பரப்பப்பட்டு வருவதாகவும், அதேப்போன்று ஒரே குழுவில் பல்வேறு அரசியல் கருத்துக்களை முன்வைப்பவர்கள் உள்ளதால் இவ்வாறானவர்கள் தங்களுக்கு எதிரான கருத்துக்களை முன் வைப்பதாகவும், இவை வன்முறையாக மாறக் கூடும் எனவும் கஃபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதியான தேர்தல் ஒன்று இம் முறை இடம் பெற வேண்டும் என்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு இலங்கையின் பல பாகங்களிலும் களத்தில் இறங்கியுள்ளதுடன் பல அரசியல் கட்சிகளை சார்ந்த பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுனர்கள் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்துள்ளனர் அதன் ஒரு கட்டமாக இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் அவர்களையும் சந்தித்துள்ளனர்.

பெரும்பான்மை இனத்தை சார்ந்த ஒருவரே ஜனாதிபதியாக வர முடியும் என்ற நிலை காணப்பட்டாலும் தமிழ் பொது வேட்பாளர் என்பது பேசு பொருளாக மாறியுள்ளது.

இதனால் தமிழ் கட்சிகளை சேர்ந்த பலரும் பல கருத்துக்களை கூறினாலும் அரசியல் நிலவரங்களின் படி தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் ஊடான களநிலவரம் மக்கள் மத்தியில் குறிப்பாக வடக்கு கிழக்கில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் பொது வேட்பாளர், மக்களது உரிமைகளுக்கான குரலாக ஒலிப்பதாக காணப்படுகிறது. எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து, நிரந்தர தீர்வுக்கான ஒரு அரசியல் களத்தை மாற்ற நாமும் ஒன்றினைந்து முயற்சிப் போம்....

• • •

**ஜனாதிபதியாக ... தொடர்ச்சி ...**

வந்தாலும், புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது" என்றார்.

இதேவேளை, இந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட சீனத் தூதுவர் கீ சென்ஹொங் (Qi Zhenhong) "ஒரே சீனா கொள்கையை இலங்கை கடைப்பிடிப்பது எப்போதும் பாராட்டுக்குரியது. இது உண்மையான நட்பின் உணர்வை பிரதிபலிக்கிறது.

நட்பு நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாப்பதில்சீனாஉறுதியானநிலைப்பாட்டை கொண்டுள்ளது. அதேபோன்று சீனாவின் இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்த சில முயற்சிகள் உள்ளன, ஆனால் அத்தகைய நோக்கங்களை நாங்கள் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள மாட்டோம்." என்றும் தெரிவித்துள்ளார்.

# மோதல்கள் நடைபெறும் நாடுகளில் கல்வியின் மீதான ஆபத்துகளும் தீர்வுகளும்

பாகம் 2

**தாக்குதல்களில் இருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினத்தின் முக்கியத்துவம்:**

- கல்வி மீதான தாக்குதல்கள் குறித்த விழிப்புணர்வை பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களிடம் ஏற்படுத்துதல்
- அனைத்து சிறுவர்களினதும் கல்வி உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கைகளை யுனிசெப் மற்றும் ஐக்கிய நாடுகள் அமையத்தின் ஊடாக எடுத்தல்.
- சர்வதேச நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் அவலத்தை போக்க உரிய நடவடிக்கைகளை அந்தந்த நாடுகளின் ஊடாக எடுத்தல்.
- கல்வி மனிதனின் அடிப்படை உரிமை என்பதை நினைவூட்டுகிறது. மனித உரிமைகளுக் கான உலகளாவிய பிரகடனம் மற்றும் ஏனைய சர்வதேச ஒப்பந்தங்களில் கல்விக்கான உரிமைகள் பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த உரிமைகள் பெரும்பாலும் ஆயுத மோதல் களின்பொழுது சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் மீறப்படுகிறது.

பின்வரும் வகைகளில் பாடசாலைக் கல்வியையும் கற்கும் மாணவர்களின் உடல், உள்ளத்தைப் பாதிக்கும் வகையிலும் தாக்குதல்கள் இடம்பெறுகன்றன.



- ஷெல் தாக்குதல், குண்டுவீச்சுக்கள் தொடர்ச்சியாக பாடசாலைகள் மீதும், கல்வி நிறுவனங்களின் மீதும் இடம் பெறுதல்.
- கல்வி நிறுவனங்களின் மீதான ஆக்கிரமிப்புக்களும் அவற்றை படையினருக்கான முகாம்களாக மாற்றி அமைத்தலும்
- ஆயுத மோதல்களின் பொழுது போரிடுவதற்கான ஆயதப் பயிற்சிகளை வழங்குவதற்காக சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் அவர்களைக் குறுகிய கால இடைவெளியில் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்.
- கல்வி கற்பதற்குத் தேவையான மூல வளங்களையும், ஆசிரியர் ஆளணிகளையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதற்கான தடைகளையும், கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துதல்.
- போர் ஆரம்பிப்பதற்கு முன்னரேயே, போருக்கான வித்திட்ட ஒரு சம்பவமாக ஸ்ரீமா வோ பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்த 1972ஆம் ஆண்டில் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு எதிரான தரப்படுத்தல் திட்டம் கொண்டுவரப்பட்ட பின்னரேயே தமிழ் மாணவர்களின் கல்வியில் வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. அதில் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றே தமது சுதந்திரமான வாழ்வுக்கு வழிகாட்டும் என்ற அடிப்படையில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினர்.
- அனைத்துக் கற்போர்களுக்கும் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் உள்ள வர்களுக்கும் அனைத்து மட்டங்களிலும் கல்வி கற்பதற்கான சூழலையும், பாதுகாப்பையும் வழங்காதிருத்தல்.



**வல்வை.ந.அனந்தராஜ்**
**B.A. Hons., M.A,**
**Dip-In-Journalism, Dip-In Jounalism,**
**SLPS,SLEAS**

- கொரோனா பாதிப்பு சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய கொரோனா தொற்றின் காரணமாகப் பாடசாலை மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் இதன் பாதிப்பு பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி, இன்றும்கூட அந்தத் தாக்கத்தில் இருந்தும் விடுபடமுடியாத நிலையிலேயே பெரும்பாலான சிறுவர்களும், ஆசிரியர்களும் இருக்கின்றனர். இதன் விளைவாக மனச்சோர்வு, மனஅழுத்தம், பதட்டம், கட்டுக்கடங்காத நினைவு நடத்தை, நினைவாற்றல் இழப்பு, கோபம், பயம், எரிச்சல், வாழ்க்கையில் நம்பிக்கையின்மை, குற்றஉணர்வு, பழிவாங்கும் தன்மை போன்ற உளவியல் தாக்கங்களினால் பாதிக்கப்பட்ட பல இலட்சக் கணக்கான மாணவர்கள் இருக்கின்றனர். இதனால், பல உளம்சார் மற்றும் நடத்தைசார் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளது.



- பாடசாலைக்குச் சமுகமளிக்கும் மாணவர்களும், மாணவிகளும் பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தப்படல். இது அண்மைக் காலமாக இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், கட்டுப்பாடுகளும், தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லாத நிலையில் பாலியல் ரீதியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அதிர்ச்சியான சம்பவங்கள் சில பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களாலும், ஏனைய பணியாளர்களினாலும் உள்ளாக்கப்படுவதால், சிறுவர்களில் உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதை இலங்கையில் சகல ஊடகங்களும் வெளிப்படுத்தி வருகின்றபோதும், அவை இதுவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவும் இல்லை.
- அதேபோன்று பல வீடுகளில் சிறுவர்கள் மீதான குடும்ப வன்முறையும், வீட்டில் உள்ள தந்தை, மூத்த சகோதரர்கள், மாமன்மார், மற்றும் வீட்டில் அல்லது அயலில் உள்ள ஏனைய பெரியவர்களினாலேயே பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்ற நிலையும் இலங்கையிலேயே குறிப்பாக 2009ஆம் ஆண்டின் பின்னர் அதிகளவில் காணப்படுகின்றது.



- இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில், பல பாடசாலைகளும், மருத்துவ மனைகளும் குண்டுத் தாக்குதல்களினால் அழிக்கப்பட்ட போது பல்லாயிரக்கணக்கான சிறுவர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும், பெண்களும் கொல்லப்பட்டனர். அதன் விளைவாகப் பலர் தமது அவயவங்களையும் இழந்துள்ளனர். இன்றும் கூட அவர்களால் பழைய நிலைக்குத் திரும்ப முடியாதுள்ளது.
- போர் காரணமாகவும் தொற்று நோய்கள் காரணமாகவும் கற்றல் கற்பித்தல் நிலைமைகளைத் தட்டிக் கழித்துப் பழக்கப்பட்ட பாடசாலைகளில் குறிப்பாக நகரப் புறங்களில் உள்ள தேசிய பாடசாலைகள் என்று கூறப்படுகின்ற பிரபல பாடசாலைகளில் குறிப்பிட்ட சில பாடசாலைகளின் அதிபர்கள் பொதுப்பரீட்சைகளுக்குத் தோற்றுகின்ற க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கின்ற மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களை எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்கு முன்னரேயே பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளை நிறுத்தி விட்டு பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் நடைமுறைகளைப் பின்பற்றித் தாமும் படிப்பு லீவு (study Leave) என்ற பெயரில் வீடுகளுக்கு அனுப்பி விடுகின்றார்கள். இவை அந்த மாணவர்கள் மத்தியில் பல்வேறு சமுகச்சீரழிவுகள் ஏற்படுவதைக் காணமுடிகின்றது. இந்தப் பழக்கமே அவர்கள் மத்தியில் போதைப் பொருட்களைப் பாவித்தல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாதல் போன்ற தீய பழக்ககளுக்கு அடிமையாகின்றனர்.
- இலங்கையில் போர் முடிந்த பின்னர் சுமூக நிலைக்குக் கொண்டுவருவோம் என்று உலக நாடுகளுக்கு வாக்குறுதியளித்த இலங்கை அரசு, தமிழ்ப் பாடசாலைகளைச் சிங்களப் பாடசாலைகளாகவும், தமிழ் பாடசாலைகளைப் பாரபட்சமாக நடத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது.

**தொடரும்...**

# வாக்குறுதிகள் புஷ்வாணமாகுமா?

துரைசாமி நடராஜா

ஜனாதிபதி தேர்தல் அடுத்தவாரம் இடம் பெறவுள்ள நிலையில் வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு தமது எதிர்கால கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றனர். இந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக்க, நாமல் ராஜபக்ச மற்றும் தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் ஆகியோர் உள்ளிட்ட பல வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளனர். இதில் நாட்டின் அபிவிருத்தி குறித்த எதிர்கால திட்டங்கள், பொருளாதார மேம்பாட்டு வேலைத் திட்டங்கள், தொழில்வாய்ப்பு உருவாக்கம், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. அத்தோடு மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் வாழ்வில் நலன்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் பல விடயங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஜனாதிபதி தேர்தல் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. இதற்கேற்ப நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தேர்தல் முதன் முதலாக 1982 இல் இடம்பெற்றது. இத்தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்தன 52.91 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இதனைத் தொடர்ந்து 1988 இல் ரணசிங்க பிரேமதாசா 50.43, 1994 இல் சந்திரிகா குமாரதுங்க 62.28, 1999 இல் சந்திரிகா குமாரதுங்க 51.12, 2005 இல் மஹிந்த ராஜபக்ச 50.29, 2010 இல் மஹிந்த ராஜபக்ச 57.88, 2015 இல் மைத்திரிபால சிறிசேன 50.29, 2019 இல் கோட்டபாய ராஜபக்ச 52.25 வீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவாகி இருந்தனர். இந்த வகையில் இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் இம்மாதம் 21 ம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் 39 வேட்பாளர்கள் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இதுகாலவரையிடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் இத்துணை அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடவில்லை என்பதும் தெரிந்ததாகும். 2019 ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் 35 பேர் போட்டியிட்டனர். இம்முறை ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச,அனுரகுமார திசாநாயக்க, நாமல் ராஜபக்ச, சரத் பொன்சேகா, விஜயதாச ராஜபக்ச, உள்ளிட்ட பலரும் தேர்தலில் களமிறங்கியுள்ள நிலையில் இத்தேர்தலில் பலமுனைப் போட்டி நிலவுகின்றது. இதேவேளை இம்முறை தமிழ் பொது வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் போட்டியிடுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### வாழ்வாதார மேம்பாடு

தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் தமது எதிர்கால முன்னெடுப்புக்களை வலியுறுத்தி தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது வழக்கமாகும். இதனடிப்படையில் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் தங்களது எதிர்கால முன்னெடுப்புக்களை மையப்படுத்தி தேர்தல் விஞ்ஞாபனத்தினை வெளியிட்டுள்ளனர். இவற்றுள் சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க மற்றும் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் பா.அரியநேந்திரன் ஆகியோர் மலையக மக்கள் தொடர்பாக எத்தகைய வாக்குறுதிகளை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ளனர் என்பது குறித்து நோக்குவோம்.

பெருந்தோட்ட மக்களுக்கு லயன் அறை வாழ்க்கைக்கு பதிலாக சிறந்த வாழ்க்கையை வழங்குவதற்காக, அவர்களுக்கு வீட்டு உரிமைகள் மற்றும் சுதந்திரமான காணி உரிமைகள் வழங்கப்படும். அதற்கமைய தோட்டத்துக்குப் பதிலாக கிராமங்களாக மாற்றப்படும். இதற்கான வேலைத்திட்டங்கள் 2025 ம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல தனித்துவமான நடவடிக்கைகளைகளை மேற்கொள்ளுதல் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்டத்துறையில் புரட்சி மிக்க மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக முன்னதாக வலியுறுத்தி இருந்தார். அத்தோடு மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதமர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். மேலும் மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய 10 பேர்ச் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மலையக மக்கள் தமது காணிகளில் தேயிலையை பயிரிட்டு, அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் பெருந்தோட்டத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்கு பெருந்தோட்டக் கம்பெனிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் கேட்டுக் கொண்டிருந்தார்.

### சகலருக்கும் வெற்றி

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 'சகலருக்கும் வெற்றி' என்ற தொனிப்பொருளில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்துள்ளார். வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், அனைத்து பிரஜைகளையும் வலுப்படுத்துதல், அரச துறையை மேம்படுத்தல், வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்தல், தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட பிரதான விடயங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. அத்தோடு மலையக மக்கள் தொடர்பிலும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல விடயங்கள் காணப்படுகின்றன. இரண்டு நூற்றாண்டுகளாக மலையக தமிழ் சமூகம் இலங்கைக்கு வழங்கிய பெரும் பங்களிப்பை தாம் அங்கீகரிப்பதாக அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும் அவர்கள் அனுபவித்த கட்டமைப்பு ரீதியான புறக்கணிப்பை கருத்தில் கொண்டு, இச்சமூகத்தின் நல்வாழ்வை மேம்படுத்த நேர்மறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடப் பிரிவுகளை கொண்ட தேசிய பாடசாலைகளை நிறுவுவது உட்பட இலக்கு நோக்கிய திட்டங்கள் மூலம் அனைத்து நிலைகளிலும் மலையக மாணவர்களின் கல்விச் சாதனைகளை மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், தோட்டத் தொழிலாளர்களை காணிக்குச் சொந்தமான சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான அரசாங்கக் கொள்கையை அறிமுகப்படுத்தி அமுல் படுத்துதல், இந்த இடம்பெயர் காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வதற்கு முறையான சம்பளத்தை உறுதிப்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் உள்ளீர்க்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் 48 அம்ச நிபந்தனைகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி முழுமையான ஆதரவை வழங்க தீர்மானித்திருந்தது. 7 அத்தியாயங்களைக் கொண்டு 48 அம்சங்களை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிர்க்கட்சித் தலைவர் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து தமிழ் முற்போக்கு கூட்டணி தமது ஆதரவை பகிரங்கமாக அறிவித்திருந்தது. இளைய சமுதாயத்தினரின் வேலைவாய்ப்பு, காணி மற்றும் வீட்டுரிமை, பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி, மலையக மக்களை தேசிய நீரோட்டத்துக்குள் இணைத்துக் கொள்ளுதல் உள்ளிட்ட பல விடயங்கள் கூட்டணியின் 48 அம்ச கோரிக்கைகளில் உள்ளீர்க்கப்பட்டிருந்தன.

இதேவேளை தற்போது கிடைக்கப்பெறும் சம்பளத்தை விட கூடுதலான ஒரு தொகையினை தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள முடியுமான ஒரு முறைமையின் ஊடாக அவர்களின் நாளாந்த வருமானத்தை உயர்வடையச் செய்வதோடு, மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியுமான கால்நடை வளர்ப்பு மற்றும் மாற்றுப் பயிர்ச்செய்கைகள் போன்ற புதிய துறைகள் மீது தோட்டத் தொழிலாளர்கள் நாட்டம் கொள்ளக்கூடிய வகையில் கூட்டு ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பெருந்தோட்டக் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும். புதிதாக பத்து தேசிய பாடசாலைகளும் பல்கலைக்கழகம் ஒன்றும் நிறுவப்படும். பெருந்தோட்ட பாடசாலைக் கல்வியில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நாட்டின் ஏனைய பாடசாலைகளின் தரங்களை ஒத்த வகையில் அபிவிருத்தி செய்யப்படும். பெருந்தோட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு பிரதான நீரோட்டத்தில் காணப்படும் கல்வி நிறுவனங்களில் அனுமதி பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு விரிவு படுத்தப்படும் என்று சஜித் பிரேமதாசா 'ஒன்றாய் முன்னோக்கி' என்ற தனது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்னதாக 2019 இல் தெரிவித்திருந்தமையும் நோக்கத்தக்கதாகும்.

### மலையக பல்கலைக்கழகம்

இதேவேளை பெருந்தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்கான விசேட ஜனாதிபதி செயலணியை உடனடியாக நிறுவுதல், மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களை உள்ளடக்கியதாக மலையகத்தில் 10 தேசிய பாடசாலைகளை

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# ஈழ விடுதலைக்காகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் செயற்பட்ட தமிழ் நாடு வணிகர் சங்கப் பேரமைப்பின் தலைவர் வெள்ளையன் உயிர் நீத்தார்!! அஞ்சலி!!!





ஈழ விடுதலைக்காகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் செயற்பட்ட தமிழ் நாடு வணிகர் சங்கப் பேரமைப்பின் தலைவர் வெள்ளையன் *10/09/2024* அன்று சென்னையில் உயிர்நீத்தார்.

*76* வயதில் தனது இறுதி மூச்சை இழந்த அவர் வழக்கமான வணிகர் சங்க நிர்வாகியாக இல்லாமல் அரசியல் உணர்வுடனேயே செயற்பட்டார்.

தொடக்கத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக பொது வெளியில் அறியப்படுமாறு உலக வணிக அமைப்புக்கு (*WTO*) எதிராக தனது கருத்துகளை வெளிப்படுத்தினார்.

பின்னர் அக்கருத்துகளை செயற்படுத்து பவராக தனது தலைமையிலான வணிகர் சங்கப் பேரமைப்பை கொண்டு சென்றார்.

கோக், பெப்சி போன்ற ஏகாதிபத்திய குளிர் பானங்களை புறக்கணிக்கும் இயக்கத்தை வணிகர்கள் இடையே முன்னெடுத்துச் சென்றார்.

அடுத்ததாக இதுபோன்ற இயக்கத்தை இந்திய அளவிலான வணிகர் சங்கப் பேரமைப்புடன் இணைந்து செயற்பட்டார்.

இத்தகைய அவரை தனதாக்கி கொள்வதற்கு பாஜகவின் 'சுதேசி இயக்கம்' முயற்சி செய்தது.

எனினும் அடுத்த சில ஆண்டுகளிலேயே ஈழ விடுதலைச் சிக்கலில் வெள்ளையனுடைய செயற்பாட்டினால் சுதேசி இயக்கம் அவரை விட்டோடியது.

ஈழச் சிக்கல் தமிழ் நாட்டில் *2008*ல் ஏற்படுத்தியிருந்த கையறு நிலையை உடைத்த காரணிகளில் ஒன்றாக வெள்ளையனுடைய அரசியல் நடவடிக்கை இருந்தது.

வகைமாதிரியான வணிகர் சங்க நிர்வாகியாக இல்லாமல் அரசியல் உணர்வுடனான செயற்பாட்டின் அங்கமாக *2008-2009*ல் முதன்மையாக அவர் தலைமையிலான வணிகர் அமைப்பும் அவரும் அவரது இல்லமும் மாறியது.

குறிப்பாக முத்துக்குமார் இறுதி ஊர்வல நிகழ்ச்சி தொடர்பாக முன்னின்று செயற்பட்டார்.

ஈழச் சிக்கல் தொடர்பான அவரது இத்தகைய நடவடிக்கைகளுக்கு அவர் விலை கொடுக்கவே நேர்ந்தது.



அன்று தமிழ் நாட்டில் முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவ்விலையை வெள்ளையனிடமிருந்து பறித்தார்.

வெள்ளையனுக்கு போட்டியாக விக்கிரமராஜா தலைமையில் டம்மியான வணிகர் அமைப்பை உருவாக்கினார் கருணாநிதி.

எனினும் விக்கிரமராஜாவினால் வெள்ளையனின் இடத்தை கைப்பற்றுவதற்கு முடியவில்லை. வெள்ளையனும் அதைப் பற்றி கவலைப்படாமல் இறுதிவரையிலும் ஈழ விடுதலை ஆதரவாளராகவே இருந்தார்.

வெள்ளையன் தலைமை தாங்கிய வணிகர் அமைப்பில் இலட்சக்கணக்கானோர் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்களில் ஏகப் பெரும்பான்மையினர் சிறு மற்றும் நடுத்தர வணிகர்களே.

அவர்களை அரசியல்ரீதியாக இந்திய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஈழ விடுதலை ஆதரவுக்காகவும் உலக வணிக அமைப்பிற்கு எதிராகவும் ஒப்பீட்டளவில் ஈடுபடுத்தினார்.

உற்பத்தியாளர்களையாவது ஒரு வகையில் ஆட்சியாளர்களுக்கு எதிராக இத்தகைய செயலில் ஈடுபடுத்திவிடலாம்; ஆனால் வணிகர்களை அவ்வாறு ஈடுபடுத்துவது எளிதல்ல. ஆனால் வெள்ளையன் அதை செய்து காட்டினார்.

அத்துடன் ஈழச் சிக்கல், வணிகர் நலனிலான கோரிக்கைகள் என்றில்லாமல் ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்ட ஆதரவுடன் சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட் கட்சி/பழங்குடி மக்கள் மீதான அரசப் பயங்கரவாத எதிர்ப்புடனும் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் வகையில் ஏகாதிபத்திய எதிர்ப்பில் பரந்த பார்வையை கொண்டிருந்தார்.

வெள்ளையனை முடக்குவதற்கு அவருக்கு போட்டியாக விக்கிரமராஜா தலைமையில் ஒரு வணிகர் சங்கத்தை உருவாக்கிய அன்றைய தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதியின் மகனும் இன்றைய தமிழ் நாடு முதலமைச்சர் மு..க. ஸ்டாலின்(அதே வேளையில் தனது தந்தையை அடியொற்றி விக்கிரமராஜாவின் மகனை தமிழ் நாடு சட்டமன்றத்தின் தற்போதைய உறுப்பினராக்கியிருக்கிறார்.) வெள்ளையனுடைய மறைவுக்கு பிரத்யேகமாக அஞ்சலி செய்தி அறிக்கையை வெளியிடுமாறு ஈழ விடுதலை ஆதரவு வரலாற்றில் வெள்ளையன் நீங்கா இடத்தைப் பிடித்து வணிகர்களுக்கு முன் மாதிரியாக திகழ்கிறார்.

இத்தகைய (ஈழ/ஏகாதிபத்திய எதிர்ப்பிலான) அரசியல் உணர்வாளர் வெள்ளையனுக்கு பெரும் அஞ்சலி.

**தோழர் பாஸ்கர்**

## அதிபர் வேட்பாளர்களுக்கிடையே அமெரிக்காவில் நடைபெற்ற தொலைக்காட்சி விவாதம்:

# அமெரிக்க அரசியலின் தற்போதைய செல்நெறி?

தமிழில்: ஜெயந்திரன்

அமெரிக்க அதிபருக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கிடையே நடைபெறும் தொலைக்காட்சி விவாதம், அமெரிக்க அதிபருக்கான தேர்தலின் முடிவுகளை அதிகம் பாதிப்பதில்லை. அதே நேரம் *1960* இல் நிக்சனுக்கு எதிராகக் கெனடி பெற்ற வெற்றியும், *1988* இல் டுகாக்கிக்கு எதிராக புஷ் பெற்ற வெற்றியும் இதற்கு விதிவிலக்காகும்.

அது போலவே ஒரு சில மாதங்களுக்கு முன், ஜோ பைடன் மேற்கொண்ட பரப்புரை தோல்வியில் முடிந்ததும், டொனால்ட் ட்ரம்புடன் அவர் மேற்கொண்ட விவாதத்தின்





முடிவும் இருந்தது.

கடந்த காலத்தில் இருந்தது போல, விவாதங்களுக்கு இப்போது அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. உண்மையில் சம கால அமெரிக்க அரசியல், பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டதாகவும், பிரபலங்களை மையப்படுத்திய தாகவும் மாற்றமடைந்திருப்பதுடன், விவாதங்கள் கடந்து போய்விட்ட காலத்தின் குறியீடுகளாகவே பார்க்கப்படுகின்றன. காரணம் கடந்த கால அமெரிக்க அரசியலில் பகுத்தறிவுமிக்க விவாதங்கள் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டன.

உண்மையில் அந்த நாட்கள் மலையேறிவிட்டன. அமெரிக்க அரசியலிலிருந்து பகுத்தறிவை இல்லாமல் ஆக்கியதற்கு மிகவும் முன்னணிப் பிரபலமாக விளங்குகின்ற டொனால்ட் ட்ரம்புக்கு முக்கிய பங்குண்டு. அமெரிக்க அரசியலிலிருந்து பகுத்தறிவை முற்றாக அகற்றி, அதனைப் பிரபலங்களின் பண்பாடாக மாற்றிய பெருமை முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பையே சாரும்.

ஒன்றுக்கொன்று முற்று முழுதாக எதிர்நிலையில் இருக்கின்ற இரு தளங்களில் அமெரிக்க வாக்காளர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு தளங்களுமே பகுத்தறிவைக் கடந்ததாகவும், உணர்ச்சிகளை மையப்படுத்தியதாகவும், யதார்த்தத்திலிருந்து முற்றிலும் அந்நியப்பட்டதாகவுமே காணப்படுகின்றன.

தமக்கு எதிரானவர்கள் "மோசமானவர்கள்" என்றும் அமெரிக்காவின் எதிர்காலத்துக்கு முற்றிலும் "ஆபத்தானவர்கள்" என்றும் இரண்டு தளத்தில் உள்ளவர்களுமே நம்புகிறார்கள்.

இவ்வாறாக மிகவும் ஆழமாகப் பிளவுபட்டு, எந்தவித பகுத்தறிவும் இன்றி மாயச்சிந்தனைகள் நிறைந்திருக்கும் அரசியல் பின்புலத்தில், பகுத்தறிவுடன் கூடிய விவாதங்களுக்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வகையில் பார்க்கும் போது, அமெரிக்க அரசியல் என்பது தனித்துவம் வாய்ந்தது. மேற்கு நாடுகளிலுள்ள வர்ணனையாளர்கள் இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்வது குறைவு. இதனால் ட்ரம்ப்பால் எவ்வாறு தொடர்ந்து செல்வாக்குச் செலுத்த முடிகிறது என்பதையும் பலமான ஒரு அரசியல்வாதியாக அவர் எவ்வாறு தொடர்ந்து வலம்வருகிறார் என்பதையும் புரிந்துகொள்வது இவர்களுக்குக் கடினமான ஒரு விடயமாகும்.

இந்த விடயத்தில் முன்னாள் அதிபர் ட்ரம்ப் தனித்துவம் வாய்ந்தவர். ஏனென்றால் ட்ரம்பைப் போன்ற ஒருவர் வேறெந்த மேற்கத்தைய நாட்டிலும் அரச அதிபராக வந்திருக்க முடியாது.

சில மேலோட்டமான ஒற்றுமைகள் இருந்தாலும், நைஜல் வராஜ் *(Nigel Farage)*, மறில பென் *(Marie Le Pen)* போன்ற தற்போது மக்கள் செல்வாக்கைப் பெற்றுவருகின்ற தலைவர்களுடன் ஒப்பிடும் போது, ட்ரம்ப் முற்றிலும் வேறுபட்டு நிற்கிறார். நீதிமன்றத்தின் தண்டனை பெற்ற ஒரு குற்றவாளியாகவும், அதே நேரம் ஒரு கிளர்ச்சிக்குத் தூபம் போட்டவரும், அதே நேரம் நீதிமன்றத்தில் தோல்வியை அடைந்த பின்னரும் கூட தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்தவருமான ட்ரம்ப்பைப் போன்ற ஒருவர், பிரித்தானியாவிலோ அன்றேல் பிரான்சிலோ பிரதம மந்திரியாகவோ அன்றேல் அதிபராகவே வந்திருப்பதற்கான வாய்ப்பே கிடையாது.

சமகாலத்தில் ட்ரம்ப் அமெரிக்க குடியரசின் வீழ்ச்சியை ஏற்படுத்தியவராகவும் அதே நேரம் அந்த வீழ்ச்சியின் அறிகுறியாகவும் தோற்றமளிக்கிறார்.

அமெரிக்க நாட்டின் அரசியலமைப்புச் சாசனம் வரையப்பட்ட, *1787*ம் ஆண்டு பிலடெல்வியாவில் நடைபெற்ற அரசியலமைப்பு மாநாட் டின் முடிவில், அமெரிக்க குடியரசு எவ்வளவு காலம் நீடிக்கும் என்று பெஞ்சமின் பிராங்கிளினிடம் *(Benjamin Franklin)* ஒரு கேள்வி கேட்கப்பட்டது. "எவ்வளவு காலத்துக்கு அமெரிக்க மக்கள் அதற்கு தகுதியுடைய வர்களாக இருக்கிறார்களோ அவ்வளவு காலம் அது நீடிக்கும். ஆனால் மக்கள் மத்தியில் ஊழல்கள் அதிகமாகும் பொழுது, சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது" என்று பிராங்ளின் தீர்க்கதரிசனமாகப் பதில் கூறினார்.

நேற்று இரவு பிலடெல்வியாவின் தேசிய மாநாட்டு மையத்தில் நடைபெற்ற விவாதத்தில், வெற்றியை ஈட்டியது கமலா ஹரிஸ் என்பது வெளிப்படையானது - *100* மில்லியன்கள் அமெரிக்கர்கள் இந்த விவாதத்தைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு வேட்பாளர்களுக்கும் இடையே நிலவும் போட்டி மிகவும் நெருக்கமானது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பல கருத்துக்கணிப்புக ளில் ட்ரம்புடன் ஒப்பிடும் போது, கமலா ஹரிஸ் சற்று அதிகமான புள்ளிகள் எடுப்பதாகவே அறியக்கிடக் கிறது.

**இரண்டு வேட்பாளர்களும் விவாதத்தை எவ்வாறு கையாண்டி ருக்கிறார்கள்?**

தன்னைப்பற்றி மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை அதிகரிப்பதற்காக கமலா ஹரிஸ் இந்த விவாதத்தைப் பயன் படுத்தியிருக்கிறார். அதனைச்செய்ய வேண்டிய தேவையும் அவருக்கு இருந்தது. குறிப்பாக கொள்கை தொடர்பான விடயங்களில் தனது நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை அவருக்கு இருந்தது. கடந்த காலத்தில் முக்கிய அமெரிக்க தலைவர்கள் செயற்பட்டது போன்று, உறுதியானவராகவும், விவேகமானவராகவும் கமலா ஹரிஸ் தோற்றமளித்ததோடு, ட்ரம்பையும் சிறப்பான விதத்தில் கையாண்டார்.

ஆனால் இங்கே ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால், தாராளவாத சனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பாகவும் ட்ரம்ப் கொண்டிருக்கும் வெறுப்பை கமலா ஹரிஸ் நேரடியாகவே தாக்கிப் பேசினார். "அதிபராவதற்கு முற்றிலும் தகுதியற்றவர்" என்று பல சந்தர்ப்பங்களில் கமலா ட்ரம்பைச் சாடினார்.

அதுமட்டுமன்றி, அமெரிக்காவின் எதிர்காலம் தொடர்பாக ஒரு நேர்முகமான பார்வையை கமலா ஹரிஸ் தனது விவாதத்தில் முன்வைத்தார் "எதிர்காலம் தொடர்பாக எமது நாட்டில் நம்பிக்கையைக் கொண்டிருக்கின்ற ஒரு முற்றிலும் புதிய தலைமைத்துவப் பரம்பரையின் பிரநிதியாக நான் இருக்கிறேன்".

ட்ரம்பின், அமெரிக்க சமூகத்தைப் பிளவுபடுத்துகின்ற, முட்டாள்தனமானதும் எதிர்காலத்தில் நம்பிக்கையற்றதுமான பார்வையிலிருந்து இது முற்றிலும் வேறுபடுகின்றது.

"நாம் தொடர்ச்சியாகத் தோல்வியைச் சந்தித்துக்கொண்டிருக்கும் ஒரு நாடு" என்று ட்ரம்ப் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் அமெரிக்காவை மீண்டும் ஒரு பெரிய நாடாக எப்படி மாற்றப்போகின்றார் என்பது தொடர்பாக அவர் எதுவும் எடுத்துவைக்கவில்லை.

இந்த வாரத்தின் தொடக்கத்தில், வழமையாகச் செய்வது போன்றே, "ஏபிசி எல்லோரையும் விட மோசமானவர்கள்" என்று சொல்லி, முன்கூட்டியே இந்த விவாதத்தின் நம்பகத்தன்மையை ட்ரம்ப் கேள்விக்கு உள்ளாக்கினார்.

இந்த விவாதத்துக்கான தயாரிப்பில் ட்ரம்ப் அதிக நேரத்தைச் செலவிடவில்லை. "எல்லோருக்கும் ஒரு திட்டம் இருக்கும். ஆனால் நேரடியாக முகத்தில் குத்தப்படும் போது அந்தத் திட்டம் எல்லாம் பறந்து போய்விடும்" என்று முதிர்ந்த வயதை அடைந்திருக்கின்ற குத்துச்சண்டை வீரரான மைக் ரைசனின் நிலையைச் சுட்டிக்காட்டி

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

## வாக்குறுதிகள் ... தொடர்ச்சி ...

கணித விஞ்ஞான உயர்தர பிரிவுகளுடன் கூடியதாக நிறுவுவதற்கும் நுவரெலியா மாவட்டத்தில் மலையக பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுத்தல். இளைஞர் யுவதிகளின் தொழில் வாய்ப்புக்களை உறுதிசெய்யும் வகையில் மலையகத்தில் கைத்தொழில் வலயங்களையும் அதனோடு இணைந்த தொழில் பயிற்சி நிலையங்களையும் அமைத்தல். பெருந்தோட்டத்துறை நிறுவன மேற்பார்வையாளர்களின் கீழ்வரும் பெருந்தோட்ட சமூக விவகாரங்களை, அரச பொது நிர்வாக கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதற்குள்ள தடைகளை அகற்றி புதிய எல்லை மீள்நிர்ணயத்துடன் மேலதிக பிரதேச செயலகங்கள், மேலதிக கிராம சேவகர் பிரிவுகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்றவற்றை நாட்டின் ஏனைய பகுதிகளில் இருப்பதைப் போன்று நிறுவுதல். பெருந்தோட்ட சமூகத்தை வலுப்படுத்தும் சிறப்பு அபிவிருத்தி நடவடிக்கையாக *(Affirmative Action)* நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல். இதனூடாக மலையக சமூகம் அரச தொழில் வாய்ப்புகள் கல்வி மற்றும் பயிற்சி நிலையங்களில் மலையகத் தமிழ் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் குறித்தும் 2019 ம் ஆண்டு புதிய ஜனநாயக முன்னணி கவனம் செலுத்தி இருந்தது.

இதேவேளை 'வளமான நாடு அழகான வாழ்க்கை ' என்ற தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் உள்ளிட்ட மேலும் பல விடயங்களை தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் வலியுறுத்துகின்றது. சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாட்டுக்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடிய வகையிலும் உள்ளூராட்சி, மாவட்ட, மாகாணங்களுக்கும் அரசியல் மற்றும் நிர்வாக ரீதியான அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் அரசாளுகைக்கான அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதி செய்கின்ற வகையிலுமாக இத்திட்டம். முன்னெடுக்கபபடும் என்று பல விடயங்களையும் இக்கொள்கைப் பிரகடனம் வலியுறுத்துகின்றது. அத்தோடு 2023.10.15 ம் திகதி தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட ஹட்டன் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு மலையகத்தமிழ் மக்களின் அடையாளத்தையும், உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல், மலையக தமிழ் சமுதாயத்தின் சம்பளத்தை வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றவகையில்* அதிகரித்தல், மக்கள் கௌரவமான வருமானத்தை பெறுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்கள் மலையக மக்களின் நலன் கருதி தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### தோளோடு தோள் நிற்றல்

இதேவேளை தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், புதிய அரசியலமைப்பு தமிழர்களை சுயநிர்ணய உரிமையுடைய தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு நீதிப்பொறிமுறை ஊடாக விசாரணை அவசியம் போன்ற பல விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. மேலும் மலையக மக்கள் குறித்து கூறுகையில், மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை அங்கீகரிக்கின்றோம். அதன்படி அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும். அத்தோடு அவர்களது உடனடிப் பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாக கோரி வரும் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். அதனை முன்னிறுத்தி போராட்டத்தில் நாம் மலையக மக்களுடன் தோளோடு தோள் நிற்போம் என்றும் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டமைப்பின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளமையும் தெரிந்ததேயாகும்.

இவ்வாறாக வேட்பாளர்கள் தமது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்துள்ள நிலையில் மலையக மக்களின் காணியுரிமை, வீட்டுரிமை, ஊதியம், சிறு தோட்ட உரிமையாளர்களாக இம்மக்களை மாற்றியமைத்தல், தோட்டங்களை கிராமங்களாக மாற்றுதல், மாற்றுத்தொழில் ஏற்பாடுகள்,சுகாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், தேசிய பாடசாலைகளின் உருவாக்கம் என்று பலதரப்பட்ட விடயங்களும் இதில் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறாக கடந்த காலங்களிலும் பல வாக்குறுதிகள் முன்வைக்கப்பட்டு அவை புஷ்வாணமாகிய நிலைமைகளே அதிகமாகும். இந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்நிலையில் வெற்றி பெறும் வேட்பாளர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்கள் உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை உரியவாறு நிறைவேற்றுவதோடு, ஏனைய வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள மலையக மக்கள் குறித்த முக்கிய விடயங்களையும் நிறைவேற்ற முனைவது மிகவும் அவசியமாகும்.

• • •

## சிறிலங்காவின் ... தொடர்ச்சி ...

வகையில், அனைவரும் ஒன்றுதிரண்டு சங்கு சின்னத்திற்கே வாக்களிப்பதன்மூலம் அவர்களது உள்நோக்கத்தை உடைத்தெறிய வேண்டும்.

- தமிழ்க் கட்சிகள் பொது இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத நிலையில் தஙகளுக்குள் முரண் பட்டுக்கொணடு இன்று பலமிழந்து பலகூறுகளாகச் சிதைந்து உடைநது போயிருக்கின்றார்கள்.

- தமிழரசுக் கட்சிக்குள்ளேயெ ஒற்றுமையின்னை நிலவுகின்றது. சுமந்திரன் அணியினர் சஜித்பிரேமதாசாவுக்கு வாக்களிக்குமாறு கோருகின்றனர். அவர் சமஷ்டித் தீ;ரவுக்கான அரசியல் அமைப்பைக் கொண்டுவரத் தயாராக உள்ளாரா அல்லது மீண்டும் வடக்குக் கிழக்கை இணைப்பதற் கான வாக்குறுதியை வழங்கியிருக்கின்றாரா, அதேவேளை சிங்கள மக்களை உசுப்பேற்றும் வகையில் சிங்களத்தில் பிரசாரம் செய்யும் பொழுது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை ஏகவசனத்தில் தரக்குறைவாகவும் தமிழ் மக்களின் நியாயமான உரிமை;ப போராட்த்தைக் கொச்சைப்படுத்தியும் திட்டிச் சிங்கள மக்களின் கரகோவத்தைப் பெற்று விட்டு யாழ்ப்பாணத்தில் வந்து தமிழ் ம்ககளுக்கு அது செய்யப் போகின்றேன், இது செய்யபபோகின்றேன் என்று மக்களைஏமாற்றி வாக்குக் கேட்கும் சஜித் பிரேமதாசாவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று அறிக்கை விடுவது மீண்டும் தமிழ் மக்களை ஏமாளிகளாக மாற்றும் செயலாகவே இருக்கின்றது. இன்று அவர் குறிப்பிடுவதுபோல் அவரது சொல்லைக் கேட்டுவிட்டுத் தமிழ்மக்கள் மந்தைகளாக அவரின் பின்னால் கண்மூடிக்கொண்டு செல்வதற்குத தயாரில்லை. அவர்களுக்கு எது சரியென்று படுகின்றதோ அதனைச் சரியான நேரத்தில் சரியாகச் செய்வார்கள்.

- சிங்கள அரசி;ல் பதவிகளைப் பெறுவதற்காகவும் கோடிக்கணக்கான பணங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் சிங்களக் கட்சியின் தலைவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று நெருக்குதல்களைக் கொடுத்துவரும், சிங்களக் கட்சிகளனி; அடிவருடிகளாகச் செயற்படுபவர்கள்; மேற்கொள்ளும், பரப்புரைகளையும், அச்சுறுத்தல் களையும் தமிழ் மக்கள் இன்று ஏற்கத் தயாராகவில்லை. இந்த விடயத்தில் பொது வேடட்பாளருக்கே வாக்களிக்கவேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்கின்றனர்.

இந்த நிமையில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குது காலத்தின் தேவையாகும். தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்தால் அவர் ஜனாதிபதியாக வரமுடியாது தானே. அப்படியென்றால் அவரு;கku ஏன் வாக்களிக்கவேண்டும் என்ற விளக்கமின்மையும் சாதாரண பாமர மக்களிடம் காணப்படுகின்றது. சிங்கள பெரும்பான்மை மக்களிடம் இனவாதம் தலைதூக்கி ஒரு இனத்தை இனவழிப்புச் செய்துவரும் இந்த நேரத்தில் ஒரு தமிழர் எந்தக் காலத்திலும் ஜனாதிபதியாக வரமுடியாது என்ற உண்மையை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் பல இலட்சக் கணக்கான தமிழர்களின் வாக்குகள் திரு.அரியநேந்திரன் அவர்களுக்குக் கிடைக்க்ச செய்தால் சர்வதேச ரீதியாகப் பின்வரும் மாற்றங்கள் ஏற்படும்.:

- ஈழத் தமிழர்களின் ஒற்றுமையை உலகறியச் செய்யலாம்.

- இன முரண்பாட்டாளர்களாகத் தமிழர் அரசியலில் வலம் வரும் சில அரசியல்வாதிகள் தமிழர்களின் ஒற்றுமையைக் கண்டதும் ஆளணிகளின் ஆதரவின்றியே சிதறி ஓடுவார்கள்.

- தமிழ் பொது வெட்பாளர் கணிசமான வாக்குகளைப் பெற்றால் தெனிலங்கையின் சிங்கள வேட்பாளர்கள் எவரும் 50.5ூ வாக்குகளைப் பெறமுடியாவிட்டால் எவரும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படமாட்டார்கள். இவ்வாறான நிலையில் ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும் போடப்பட்ட 2ஆவது விருப்பு வாக்குகள் எண்ணப்படும்.அதிலும் 50.5ூ க்கு மேல் எவரும் பெறமுடியாவிட்டால் இந்தத் தேர்தல் இரத்தாக்கப்படும். எனவே தமிழ் மக்களின் பலத்தைக் காட்டுவதாயின் எவரும் 2ஆவது விருப்பு வாக்கைப் போடாதிருக்கவேண்டும். எனவே ஒவ்வொருவரும் தமது வாக்குச் சீட்டில் ஒரே ஒரு வாக்கை சங்கு சின்னத்திற்கு மட்டுமே புள்ளடி இட்டு சர்வதேச ரீதியாக மீண்டும் தமிழர்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்யலாம். ஆனால் ஒவ்வொரு பிரஜையும் வாக்குரிமையைத் தவறாது பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீலங்காவின்; ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொள்வாராயின் இலங்கை அரசியல்போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்று இலங்கை;த தமிழர்கள் மட்டுமல்லாது, அனைத்துலக ரீதியாகப் புலம் பெயர்ந்து வாழும் முழுத் தமிழர்களுமே எதிர்பார்க்கின்றார்கள்.

• • •

## அதிபர் வேட்பா… தொடர்ச்சி …

ட்ரம்ப் கூறினார்.

ஏற்கனவே எதிர்பார்த்தது போலவே விவாதத்தின் போது ட்ரம்ப் நடந்து கொண்டார். கொள்கை தொடர்பான விடயங்களை விவாதிப்பதைத் தவிர்த்து, பொய்களையும், அவமதிப்புப் பேச்சிலும், விழிப்புணர்வில்லாமலும், ஒன்றுக்கொன்று தொடர்பற்ற விடயங்களைப் பேசுவதிலும் அவர் நேரத்தைக் கடத்தினார்.

சட்டவிரோதக் குடியேற்றத்தை அடிக்கடி சுட்டிக்காட்டி, கொள்கை தொடர்பான விடயங்களைப் பற்றிப்பேசுவதை ட்ரம்ப் தவிர்த்துக்கொண்டார்.

இதுவும் எதிர்பார்த்ததொன்றாகவே இருந்தது - ஹரிசும் சனநாயகக் கட்சியினரும் சற்றுப் பலவீனமாக இருக்கும் பொருண்மியம், வாழ்க்கைச் செலவு போன்ற விடயங்களைப் பற்றிப் பேசும்படி, ட்ரம்பின் ஆலோசகர்கள் அவருக்கு அறிவுறுத்தியிருந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுடன் ஒப்பிடும் போது, ட்ரம்ப் உற்சாகமானவராகவும் ஒத்திசைவானவராகவும் காணப்பட்டார்.

விவாதத்தில் இரு வேட்பாளரும் தெரிவித்த முக்கிய கருத்துகள் எவை?

கமலா ஹரிஸ் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டார்:

“அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் பின்னர் சனநாயத்தின் மீதான மிகப்பெரிய தாக்குதலைத் தொடுத்ததாகவும்” “எங்கள் தேசத்தின் தலைநகரத்தைத் தாக்க ஒரு வன்முறைக் கும்பலை ஏவிவிட்டதாகவும்” ட்ரம்பைக் குற்றஞ்சாட்டினார்.

“அமெரிக்காவைச் சீனாவுக்கு விற்பதாக ட்ரம்பைக் குற்றஞ்சாட்டினார். கருச்சிதைவு தொடர்பாக ட்ரம்ப் கொண்டிருக்கும் கொள்கைகளை அறநெறியற்றது என்றும் அமெரிக்க பெண்களை அவமானப்படுத்தக்கூடியது என்றும் குற்றஞ்சாட்டினார்.

“சட்டத்தின் ஆட்சியை எந்தவிதத்திலும் மதிப்பதில்லை” என்று ட்ரம்பைக் குற்றஞ்சாட்டினார்.”

“உலகத் தலைவர்கள் ட்ரம்பைப் பார்த்துச் சிரித்தார்கள்” என்றும் சர்வாதிகாரிகளால் ட்ரம்ப் தவறாகக் கையாளப்படலாம்” என்று கூறினார்.

அமெரிக்காவின் இராணுவப் பிரிவினர் ட்ரம்பை ஏளனமாகப் பார்ப்பதாகக் கூறினார்.

அமெரிக்க மக்களைப் பிரிப்பதற்கு இனத்தை ட்ரம்ப் பயன்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டினார்.

இரண்டு வேட்பாளர்களும் அமெரிக்கா தொடர்பாக இரண்டு வேறுபட்ட பார்வைகளைக் கொண்டிருப்பதாக விவாதத்தின் முடிவில் கமலா ஹரிஸ் சுட்டிக்காட்டினார். ஒரு வேட்பாளரின் பார்வை எதிர்காலம் சம்பந்தப்பட்டது. மற்ற வேட்பாளரின் பார்வை கடந்துபோய்விட்ட காலம் சம்பந்தப்பட்டது. அமெரிக்க வரலாற்றின் அத்தியாயத்தில் ஒரு புதிய பக்கத்தைத் தான் புரட்டப்போவதாகவும், பிளவுபட்டிருக்கும் அமெரிக்கர்களை ஒன்றிணைப்பது தனது முக்கிய பணியாக இருக்கும் என்றும் கமலா ஹரிஸ் தெரிவித்தார்.

**நன்றி: *azerbaycan24.com***

## தமிழ்ப் பொது … தொடர்ச்சி …

சிங்கள– பௌத்த மயமாக்கல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் ஈழத் தமிழர் இருப்பு கேள்விக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றது.

இவ்வாறான அரசியல் சூழமைவில் அரசியல் அறத் தெரிவாக தமிழ்ப் பொது வேட்பாளர் ஈழத்தமிழ் மக்களின் ஒற்றுமை யின் அடையாளமாக நமக்குமுன் நிறுத்தப்பட்டுள்ளார். இம் முக்கியமான காலகட்டத்தில் தமிழ் மக்களின் தெரிவு, ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என்பது எமது ஆழமான நம்பிக்கை’ என்றுள்ளது.

## இந்தியாவுக்கு … தொடர்ச்சி …

1.85 பில்லியன் டொலர்கள் பணத்திற்கு இந்த விமான நிலையத்தை கென்ய அரசு இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்க முன்வந்துள்ளது. இந்த நிதியின் மூலம் விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், புதிய ஓடுபாதைகளும் அமைக்கப்படும் என கென்ய அரசு தொவித்துள்ளது.

ஆனால் கென்யாவின் இந்த நடவடிக்கையினால் விமானநிலையத்தில் பணிபுரியும் பலர் தொழில்களை இழக்க நேரிடும், இந்திய பணியாளர்கள் அதிகளவு இடங்களை நிரப்பலாம் அது கென்யாவின் பொருளாதாரத்தை அதிகம் பாதிக்கும் என விமானநிலைய தொழில்சங்கம் தெரிவித்துள்ளது. விமானநிலையத்தில் பொருட்கள் மற்றும் பயணிகள் மூலம் கிடைக்கும் வருமானம் கென்யாவின் மொத்த வருமானத்தில் 5 விகிதமாகும்.

கென்யாவை விட்டு அதானி வெளியேறவேண்டும். எமக்கு மாற்று வழியில்லை. எனவே உடன்பாடு கைவிடப்படும் வரையில் போராட்டம் தொடரும் என போரட்டக்குழுவின் தலைவர் மொஸஸ் டீமா தெரிவித்துள்ளார். இந்த விமானநிலையம் 8.8 மில்லியன் பயணிகளையும், 380,000 தொன் பொருட்களையும் 2022 தொடககம் 2023 ஆம் ஆண்டு வரையிலும் கையாண்டுள்ளது.

## அமெரிக்கா … தொடர்ச்சி …

ஈரானின் விமானங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு பறப்பதற்கு இந்த நாடுகள் தடை விதித்துள்ளன. ஈரானின் பலஸ்ரிக் எவுகணைகளை திட்டத்தில் பணியாற் றிய அதிகாரிகள் மீதும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ரஸ்யாவுக்கு ஈரான் குறுந்தூர ஏவுகணைகளை விற்பனை செய்துள்ளதாக அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனி பிளிங்கன் மற்றும் பிரித்தானியாவின் வெளிவிவகாரச் செயலாளர் டேவிட் லமி ஆகியோர் கடந்த செய்வாய்கிழமை(10) கூட்டாக தெரிவித்திருந்தனர்.

120 கி.மீ தூரவீச்சுக் கொண்ட ஈரானின் பாத்-360 என்ற ஏவுகணைகளை எப்படி பயன்படுத்துவது என்பது தொடர்பில் ரஸ்ய படையினர் ஈரானில் பயிற்சிகளை மேற்கொண்டு திரும்பியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## கொழும்பில் … தொடர்ச்சி …

கடந்த 5ஆம் திகதி அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை இந்தப் புதைகுழியில் புதைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

‘‘இந்த இடத்தில் கடற்படை முகாமொன்று இருந்தது. துறைமுக காவல்துறை என்பது 1988 மற்றும் 1989ஆம் ஆண்டு காலப் பகுதி மற்றும் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கும் ஒரு இடமாகப் பிரபல்யமடைந்து காணப்பட்டது.

இதனாலேயே, இந்த மனி தப் புதைக்குழி 1988 மற்றும் 1989ஆம் ஆண்டு காலப் பகுதிக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என நாங்கள் சந்தேகிக்கிறோம்’’ என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னான்டோ தெரிவித்துள்ளார். ஆனால் இது வரையில் இந்த புதைகுழு எந்த காலப் பகுதிக்குறியது என கண்டு பிடிக்க முடியவில்லை எனக் கூறப்படுகின்றது.

## இனப்படுகொலை … தொடர்ச்சி …

தீர்ப்பு வரும் வரையிலும் இந்த வழக்கை தொடரப்போவதாக சிறில் ரமபோசா தலைமையிலான தென்னபிரிக்கா அரசு தெரிவித்துள் ளது. பாலஸ்தீனத்தின் சுதந்திரத் திற்கு தனது வலுவான ஆதரவுகளை தெரிவித்துவரும் தென்னரிக்கா, பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியை முற்றாக அழிக்க மேற்கு ஜெருசலம் திட்டமிட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளது.

தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கின் பின்னர் காசாவின் தெற்குப் பகுதியில் உள்ள ரபா பகுதி மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தவேண்டும் என ஐ.நாவின் நீதிமன்றம் கடந்த மே மாதம் உத்தரவிட்டிருந்தது. எனினும் வழமைபோல இஸ்ரேல் அதனை மதிக்கவில்லை.

நிக்கரகுவா, பலஸ்த்தீனம், துருக்கி, ஸ்பெயின், மெக்சிகோ, லிபியா மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகள் இந்த வழக்கில் தென்னாபிரிக்காவுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்திருந்தன. இந்த வழக்கை தொடரவேணும் என்றால் தென்னாபிரிக்கா எதிர்வரும் மாதம் 28 ஆம் நாளுக்கு முன்னர் தனது ஆதாரங்களை சமர்ப்பித்து மீண்டும் வாதங்களை ஆரம்பிக்க வேண்டும் என அனைத்துலக நீதிமன்றம உத்தரவிட்டிருந்தது.

இதனிடையே இந்த வழக்கை கைவிடும்படி தென்னாபிரிக்காவின் புதிய கூட்டணி அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இஸ்ரேலிய அரசு அமெரிக்காவின் காங்கிரஸ் சபைக்கு அழுத்தங்களை கொடுத்துவருவதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



### வல்லரசுகளின்... தொடர்ச்சி ...

யாப்பு பகிரங்கப்படுத்தப்படவில்லை. யாப்பை பார்க்கக்கூடியதாக இருந்தாலும் அதிலே உள்ளது நடக்கின்றதா என்பது வேறு கேள்வி எழுகின்றது. ஆகவே தமிழரசு கட்சியினுடைய தீர்மானம் என்பதை விட அது சுமந்திரனுடைய தீர்மானம் தான் ஒரு ஒற்றை மனிதனால் எடுக்கப்பட்ட தீர்மானம் தான். ஆனால் தமிழரசு கட்சியினுடைய பெரும்பான்மையான உறுப்பினர்கள் அல்லது மத்திய குழு பெரும்பான்மையான உறுப்பினர்கள் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவோடு இருக்கின்றார்கள்.

**பொது வேட்பாளர் களம் இறக்கப்பட்டது, சர்வதேச சமூகத்தில் குறிப்பாக கொழும்பில் இருக்கக்கூடிய ராஜதந்திர சமூகத்தின் மத்தியிலே ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகவும் இந்தியா கூட இதனை விரும்பவில்லை எனவும் கூறப்படுகின்றது இதற்கு பிரதான காரணம் என்ன?**

சர்வதேசம் விரும்பவில்லை என்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமையே இல்லை. இது வாக்களிப்பு. ஜனநாயக உரிமை. அவர்கள் சொல்லுவார்கள் ஜனநாயகத்தின் படி செயற்படுங்கள் என்று. விடுதலைப் புலிகள் போர் நடத்திய பொழுது, விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்கு வாருங்கள் என்று சொன்னார்கள். பேச்சுவார்த்தைக்கு வந்த பொழுது விடுதலைப் புலிகள் ஜனநாயக வழியில் சிந்திக்க வேண்டும் என்றார்கள். விடுதலைப் புலிகள் மக்களை வாக்களிக்க விட வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். இப்போது தமிழ் மக்கள் தாங்களாக உணர்ந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டும் என்றால் அதிலே அதிருப்தி, என்ற விடயங்களை அவர் சொல்லுவார்களாக இருந்தால் நிச்சயமாக தவறு. அவர் தங்களுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலோடு தங்களுடைய புவிசார் அரசியல் தேவைகளோடு தான் அதை பார்க்கிறார்கள். அவர்களுக்கு என்ன தேவை, கொழும்பில் ஒரு அரசாங்கம் வேண்டும். தங்களுக்கு ஆதரவான சீனாவை ஆதரிக்காத அதே நேரம் ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளுடைய நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற மாதிரி செயற்படக்கூடிய ஒருவர் இங்கே ஜனாதிபதியாக வேண்டும். ஆகவே ரணிலா சஜித்தா என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த போட்டிக்குள் அவர்கள் பொது வேட்பாளரை அதிருப்தியாக பார்க்கிறார்கள். எங்களுடைய பிரச்சனை அது அல்ல. சஜித்தும் அல்ல ரணிலும் அல்ல அனுரவுமல்ல இலங்கை அரசு என்ற கட்டமைப்பு எங்களுக்கு எதுவும் செய்யவில்லை எங்களுக்கு ஒரு தீர்வைக் கோருகின்றோம்.

இந்த ஒற்றையாட்சி அரசியல் யாப்பு இந்த ஒற்றையாட்சி நாடாளுமன்றத்திற்குள் தீர்வு வராது என்று எங்களுடைய பட்டறிவின் பிரகாரம் நாங்கள் இப்பொழுது ஒரு பொது வேட்பாளர் நிறுத்தி அங்கே ஒரு தேசம் இருக்கின்றது ஒரு தேச எழுச்சி அங்கே வருகின்றது என்பதை காண்பிப்பதற்காக இதை கொண்டு வந்திருக்கின்றோம். அந்த இடத்திலே இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அதிருப்தி என்றால் அது அவர்களுடைய தேவையாக இருக்கலாம். நிச்சயமாக இதுதான் எங்களுடைய கருத்து. இந்த கருத்தியல் ரீதியான ஒற்றுமையிலே நாங்கள் பலமாக இருப்போமாக இருந்தால் அமெரிக்காவோ இந்தியாவோ எங்களை நோக்கி வரக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆனால் நாங்கள் பலவீனமாக இருக்கின்றோம் 15 ஆண்டு காலமாக தமிழ் தேசிய கட்சிகள் தேர்தல் அரசியலில் ஈடுபட்டு தேர்தல் வியூகங்களை வகுத்து கண்டதனுடைய உடைய தோல்விதான் இந்த நிலைமைக்கு வந்திருக்கின்றது. அவ்வப்போது சரத்தையும் மைத்திரிபாலவையும் கோட்டபாயாவையும் ஆதரித்துக் கொண்டிருந்த பின்னணிதான் இப்போது மக்களுக்கு இப்படியொரு விரத்தி நிலை வந்திருக்கின்றது. ஆகவே அதை இந்திய அமெரிக்க அரசுகள் சாதகமாக பார்க்க வேண்டும் ஏனென்றால் 2009 போருக்கு முழுமையாக ஒத்துழைத்தவர்கள் இந்தியாவும் அமெரிக்காவும் ஆகவே அதன் பின்னதான 15 ஆண்டுகளிலே எந்த தீர்வையும் கொண்டு வராதவர்கள் இப்போது இந்த மக்கள் தாங்களாக போடுகின்ற பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் அல்லது அந்த கருத்தியலை ஏற்றுக்கொண்டு ஒரு தீர்வுக்கு வரவேண்டும். பொது வேட்பாளர் எத்தனை வாக்குகள் எடுக்கிறார் என்பது பிரச்சனை அல்ல அந்த சிந்தனை எழுந்ததே சர்வதேசத்திற்கு ஒரு செய்திதான். பொதுவேட்பாளர் என்ற எண்ணம் ஏன் எழுந்தது என்ற அடிப்படையில் தான் அமெரிக்க இந்திய அரசுகள் இங்கே தீர்வு நோக்கி வரவேண்டும். இதுதான் நல்ல செய்தியாகஇருக்கும்.

ஏனென்றால் 2009 போருக்கு முழுமையாக ஒத்துழைத்தவர்கள் இந்தியாவும் அமெரிக்காவும் ஆகவே அதன் பின்னதான 15 ஆண்டுகளிலே எந்த தீர்வையும் கொண்டு வராதவர்கள் இப்போது இந்த மக்கள் தாங்களாக போடுகின்ற பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் அல்லது அந்த கருத்தியலை ஏற்றுக்கொண்டு ஒரு தீர்வுக்கு வரவேண்டும். பொது வேட்பாளர் எத்தனை வாக்குகள் எடுக்கிறார் என்பது பிரச்சனை அல்ல அந்த சிந்தனை எழுந்ததே சர்வதேசத்திற்கு ஒரு செய்திதான். பொதுவேட்பாளர் என்ற எண்ணம் ஏன் எழுந்தது என்ற அடிப்படையில் தான் அமெரிக்க இந்திய அரசுகள் இங்கே தீர்வு நோக்கி வரவேண்டும். இதுதான் நல்ல செய்தியாகஇருக்கும்.

• • •

### இஸ்ரேலின்... தொடர்ச்சி ...

கின்றன. அனைத்துலக சட்டவிதிகளும், ஜெனீவா சட்டங்களும் இங்கு மதிக்கப்படுவதில்லை. அவை பயனற்றவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் 39 பேர் கொல்லப்பட்டதுடன் பெருமளவனவர்கள் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 19 பேர் சிறுவர்களும் பெண்களுமாவார்கள். ஒரு தாக்குதலில் அதிகளவான ஐ.நா பணியாளர்கள் கொல்லப்பட்டது இந்த தடவை தான்.

இந்த தாக்குதல் ஏற்றுக்கொள்ள முடியாதது, அனைத்துலக விதிகள் மீறப்படுவது முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என இந்த தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐ.நாவின் பொதுச் செயலாளர் அன்ரோனியோ குற்றரஸ் தெரிவித்துள்ளார்.

போர் ஆரம்பமாகியதில் இருந்து இஸ்ரேல் தொடர்ந்து பாடசாலைகள், வைத்தியசாலைகள், தொண்டு நிறுவனங்களின் அலுவலகங்களைத் தாக்கி வருகின்றது. கடந்த 11 மாதங்களாக இடம்பெற்றுவரும் போரில் 41,100 பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 60 விகிதமானவர்கள் சிறுவர்களும் பெண்களும், 95,000 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

### தமிழ்ப் பொது... தொடர்ச்சி ...

செய்ய வேண்டும். அதனால் இப்போதைக்கு எங்களுடைய முழுமையைக்காட்டக்கூடிய தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எனவே அதன்மூலமாக எங்களுடைய திரட்சியை, எங்களுடைய ஒற்றுமையை தமிழ் மக்கள் மீளவும் வலியுறுத்துகின்றோம். நாம் எப்போதும் ஒரு நிகழ் நிலையில் இருக்க வேண்டும். அந்த நிகழ் நிலையில் இருப்பதற்கான ஒரு விடையம்தான் இந்த தமிழ்ப் பொது வேட்பாளர். இதனால் தற்சமயம் எதும் தமிழ் மக்களுக்கு கிடைக்காது விட்டாலும்,ஆனால் ஏதோ ஒரு காலத்தில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியமை அதற்கு உதவியாக இருக்கும்.

அந்த வகையில் நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டு முயற்சியாக வாக்களிக்க வேண்டும். ஆகக்குறைந்தது நாம் அனைவரும் ஒன்றாக இருப்பதை வெளிப்படுத்த வேண்டும். இதை வெளியுலகுக்கு சொல்வதிலும் பார்க்க எங்களுக்கு நாங்களே கூட சொல்லிக் கொள்ளலாம். என்றைக்கும் நாங்கள் தமிழ் தேசியம் என்ற ரீதியில் ஒருமித்த உணர்வோடு தமிழ் மக்கள் இருக்க வேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்ப்பவர்கள் குறித்து கவலை கொள்ளத்தேவையில்லை.

**சிவஸ்ரீ சி.குகநாதன் குருக்கள்**

இந்த நாட்டில் சிங்கள பௌத்த பேரினவாதி ஒருவரே ஜனாதிபதியாக வாரவேண்டும் என்று சட்டம் இருக்கின்றது.அதனை உடைத் தெறியும் வகையில் தமிழ் மக்களினால் இங்கு தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப் பட்டுள்ளார்.அவருக்கு வடகிழக்கு தமிழ் மக்கள் தமது பேராதரவினை வழங்குவது மட்டு மல்லாமல் இரண்டாம் மூன்றாம் தெரிவுகளுக்கு செல்லாமல் எங்கள் ஒரே தெரிவாக சங்கு சின்னத்திற்கு வாக்களித்து வடகிழக்கில் எங்கள் பலத்தினை வெளிப்படுத்துவதன் ஊடாக நாங்கள் சிங்கள மக்களுடன் இணைந்து செல்வதற்கு தயாராகயில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு செய்தியை அனுப்புவதற்கு வழியாக அமையும். நாங்கள் எதிர்கொண்டுள்ள இந்த ஜனநாயகப்போரினை தவறவிடாது எமது வேட்பாளருக்கு வாக்களித்து வெற்றி பெறச்செய்யவேண்டும்.தமிழர்களின் தேசியம் சுயநிர்ணய உரிமை போன்றவற்றினை பாதுகாத்து எதிர்கால சந்திக்கு வழங்கவேண்டும் என்பதுடன் இன்று தமிழ் தேசிய சக்திகள் பலவாறாக பிரிந்துகொண்டு இந்த நாட்டில் 15வருடங்களுக்கு முன்னர் என்ன நடந்தது என்பதை மறந்து எமது சமூகம் இருக்கின்றது. எமது வரலாறுகளை எமது எதிர்கால சமூகத்திற்கு தைரியமாக எடுத்துக்கூறுவதற்கு இந்த பொதுவேட்பாளரை வெற்றிபெறச்செய்வதன் மூலம் வரலாற்றுக்கடமையினை நிறைவேற்ற முடியும். இந்த சந்தர்ப்பத்தினை தமிழ் மக்கள் தவறவிடக்கூடாது. அதனை தவறவிட்டால் நாங்கள் மீண்டு எழுவது என்பது மிகவும் கடினமாக அமையும்.சர்வதேசத்தில் வாழும் சகல தமிழர்களும் ஒன்றாக செயற்படுவோமானால் எங்களை அசைப்பதற்கு ஏனைய நாடுகள் ஆஞ்சும். பசப்பு வார்த்தைகளுக்கு மயங்காமல், சுயதேவைகளுக்காக செல்லாமல் தமிழர்களின் உரிமையினை நோக்காக கொண்டு பொது வேட்பாளரை ஆதரிக்கவேண்டும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தமிழ் பொது வேட்பாளரும் மக்களும்..

